உ

பராதேவி துணை

குசலவ வாக்கியம்

என வழங்கும்

இராமாயண உத்தரகாண்டம்.

இஃது

சென்னை

R. S. சுபலக்ஷ்மி அம்மாளால்

பிரசுரிக்கப்பட்டது.

பத்தாம் பதிப்பு

(*Copyright Registered.*)

காபிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

PRINTED AT

THE BHARATI VIJAYAM PRESS,

TRIPLICANE, MADRAS.

1941

Price Annas 5] [விலை அணா 5

முகவுரை.

இந்தக் குசலவ வாக்கியம் என்பது வால்மீகி ராமாயணப் பாட்டைப் போலவே நமது தமிழ் நாட்டுப் பெண்களால் வெகுகாலமாய்க் கர்ண பரம்பரையாய்ச் சொல்லிக்கொண்டுவரப்பட்டு இப்பொழுது குற்றுயிராய்க் கிடக்கும் பாட்டுக்களிலொன்று. இவ்விரண்டு புஸ்தகமுஞ் சேர்ந்து இராமாயணம் முழுவதையும் எளிதாயறியவும் புண்ணியத்திற்கோ அல்லது பொழுது போக்குக்கோ ஓழிந்த வேளைகளிற் படிக்கவும், அல்லது மனப்பாடம் செய்திருந்தால் அந்தப் பாகங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளவும் தமிழ் படிக்கத்தெரிந்த சிறுமிகளுக்கும் ஸ்திரீகளுக்கும், படிக்கச் சொல்லியாவது கேட்டானந்திக்க மற்றவர்களுக்கும் மிக உபயோகமாகும்.

வால்மீகி ராமாயணப்பாட்டைவிட இந்தக் குசலவ வாக்கியம் அதிக அழகாய் அமைக்கப்பட்டிருப்பதோடு கதையும் மிகவும் உருக்கமானது. சிலபாகங்களை வாசிக்கும்பொழுதே அநேகர் கண்ணீர் விடுவார்கள். மகாலக்ஷ்மியே பட்ட கஷ்டங்களை விவரிக்கும் சரித்திரமாகையால் ஸ்திரீகளுக்கு இதில் ஒருவித பக்தியுண்டு.

என்னாற் கூடியமட்டும் இதிற் பொதிந்துகிடந்த பிழைகளைத் திருத்தி யிருக்கிறேனானாலும் என்கண்ணுக்குத்தவறிய சில பிழைகளும் பிரியத்துடன் நானே நிறுத்திய சில கொச்சைச் சொற்களும் இதிலிருக்கின்றன.

இந்தக் குசலவ வாக்கியத்திற்கு ஒருவிதமெட்டுண்டு. அது மிகவும் பொருத்தமாயும் உருக்கமாயுமிருக்கும். தெரிந்தவர்களிடத்திற் கேட்டறிந்து கொள்ளத்தக்கது. ஆனாலும் சிலபாகங்கள் வேறு மெட்டுகளுக்கு நன்குயப் பொருந்தியிருக்கின்றன. அவைகளை யாங்காங்கு குறிப்பிட்டிருக்கிறேன். கலியாண காலங்களிற் சொல்லத் தகும் அந்தப்பாகங்கள் மனப்பாடஞ்செய்ய மிகவும் பிரயோசனமாகும்.

R. S. சுபலக்ஷ்மி அம்மாள்.

குசலவ வாக்கியம் முழுவதையும்

மிகுந்த உருக்கத்துடன் சொல்லிக்கொண்டிருந்த

என் அருமைப்பாட்டி (பிதாமஹி)

வாலாம்பாள் அம்மாள் அவர்களுக்கு

இதைச் சமர்ப்பிக்கிறேன்.

R. S. S.

ஸ்ரீ

இராமாயண உத்தரகாண்டம்

அல்லது

குசலவ வாக்கியம்.

ஹநுமார் ஸ்துதி.

1 என்றும் மறவாத தசரதனுர் ஹரி முறையோர்கதையை
(என்) பழி பாவம் தீரவென்று பலதினமும் நினைந்தேன்
2 (ராமர்) கதையைநானும் பாடுகைக்குக் கருத்தில் வரவேணும்
மதி மாருதி எனக்கு வந்து முன் நடவீர்
3 (ஆவின்) குளம்படிபோல் சமுத்திரத்தைக் கூசாமலே தாண்டி
அரக்கனுடலங்கை யெல்லாம் அரைக்ஷணமே தேடி
4 நிருதர் சூழ்ந்த தாயைக்கண்டு நெடுஞ்சோகம் நீக்கி
அரக்கன் குல அட்சயகுமாரனை விழவடித்து
5 திரும்பி லங்கை சுட்டு மீண்டு சீதை சூடாமணியை
அயோத்தி ராமர் கைக்கொடுத்த அனுமாரே முன்நடவீர்
6 அஞ்சனையாள் திருவயிற்றில் அவதரித்த அமுதே
அருக்கன் கனி என்று சொல்லிச் சேரப்பாய்ந்த தீரா
7 வில்லாளி ராகவர்க்கு விஸ்வாஸ தூதா
(கவி) கல்லாமல் ஓதவல்ல காகுஸ்தகுமாரர்
8 சிலைவீர ராகவர்க்கு சினேகமான தூதா
(மாதின்)குறை தீர்த்திலங்கை சுட்டு மணிவஹித்த ஆழ்வார்
9 தனித்துநின்று குசலவர் தந்தையை விழவடித்த
கதைமஹத்துவம் பாட எந்தன் கருத்தில் வரவேணும்
10 (பிள்ளைகள்) அம்பாலே தந்தையரை அடித்த கதைபாட
அன்பாகி வந்தெனக்கு அறிவு தரவேணும்.

இராமாயணச் சுருக்கம்.

(கிருஷ்ண கிருபையாளோ என்ற மெட்டில்,
கோலுக் கோலெனக் கோலே கோலேனக் கோலே
கோலு சீதாதேவிக்குச் செங்கோலுக் கோலே
என்பதைப் பல்லவியாய் வைத்து 23-வரையில் பாடலாம்.)

11 மகாவிஷ்ணு தசரதர்க்கு மைந்தராகி வந்து
வானவர்கள் இடர்தீர தாடகையை வதைத்து
12 மஹாமுனிவர் பின்நடந்து எக்கியம் நிறைவேற்றி
வரும்வழியில் கங்கையுட மகிமைதன்னைக் கேட்டு
13 சாபத்தினாற் கல்லான அகலி(கை)யைப் பெண்ணாக்கி
மிதிலையிலே போயிறங்கி வில்லெடுத்து முறித்தார்
14 ஜனகர் ஓலை கண்டவுடன் தசரதனார் அப்போ
செம்பொன்மணித் தேரேறி மிதிலைவந்து சேர்ந்தார்
15 மனப்பிரியத்தோடேயந்த ஜானகியை வேட்டு
மறுபடியும் தாசரதி வருகுமந்த வனத்தில்
16 கனத்ததொரு வில்லெடுத்துப் பரசுராமன் எதிர்க்க
எதிர்த்து ஒரு வில்லெடுத்து ரகுநாதனோடி
17 வந்தவன் கைவில் பறித்து தந்தையரைத் தேற்றி
சேனையோடும் தேவியோடும் திருவயோத்தி வந்தார்
18 (ராமர்) இருவேட்டு வேட்டுவரச் சிறந்த நகரெல்லாம்
செம்பொன்மணி அயோத்தியெல்லாம் சிறக்க அலங்கரித்தார்
19 அன்புடைய ரகுநாதர் கண்டு மனமகிழ
அயோத்தியுள்ள மாதர்களும் ஹாரத்திக்காப் பெடுத்தார்
20 மங்கையர்கள் வாழ்த்திவர மகிழ்ந்து ரகுராமர்
அந்தமான அரண்மனையில் அழகாகப் புகுந்தார்
21 சிங்காசனத் திருந்தார் தேவியுடன் கூட
அன்புடைய பாதரப்போ அம்மானும் போனார்
22 பச்சையுடனே தங்கம் பதித்துவிட்டாப் போலே
ஏற்றமான ராமருக்கு ஏர்வை சீதை என்றார்
23 வடிவுடைய ராகவர்க்கும் வாய்ந்த சீதையர்க்கும்
பரிவுடனே பட்டாபி ஷேகமது சூட்டி
24 காணவென்று தசரதனார் கனபிரியத்தோடே
அறமுனிவர் தனையழைத்து (நகர்) அலங்கரியுமென்றார்
25 அப்படியே ஆகவென்று அறமுனியும் உடனே
அயோத்தி நகரந்தன்னை அலங்கரிக்கச் செய்தார்
26 கூனியிந்தச் சொற்கேட்டு கைகையிட மோடி
குத்திரமாய் வார்த்தைகளை க்ஷாத்திரமாய்ச் சொன்னாள்

27 கைகேயி தசரதரைக் கடிந்துமிக வெறுத்து
(ஐயா) ரகுபதியின் அபிஷேகம் பரதருக்கு என்ருள்
28 மாதாசொன்ன வாக்கியத்தை மகிழ்ந்து ராமர்கேட்டு
பிதாவாக்கியம் நிறைவேற்ற லக்ஷ்மணரைக் கொண்டு
29 மரவுரியைத் தான்தரித்து மகுடந்தனை வெறுத்து
வைதேகி அம்மனையும் கூட அழைத்துக் கொண்டு
30 சுமந்திரர் மந்திரிவிடும் தேரின்மேல் ஏறி
சித்திரகூட பர்வதத்தில் செழிக்க வந்திருந்தார்
31 ஸ்ரீபரதர் அதுகேட்டுத் திகைத்தோடி வந்து
தந்தையார் விழுந்ததுக்கம் தமயனுடன் சொன்னுர்
32 தம்பிசொன்ன வாக்கியத்தை தாசரதிகேட்டு
தந்தையரைத் தான்நினைத்துத் தரணியிலே விழுந்தார்
33 ஸ்ரீராமர் திருக்கையினுல் செய்யும்கிரியை செய்து
தம்பியர்க்குத் திருவடியைத் தானுமங்கே ஈந்தார்
34 பரதருக்குத் தேறுதலும் பரந்தாமர் சொல்லி
பஞ்சமியில் வருவேனென்று பிரதிக்கினையும் செய்தார்
35 தண்டகா வனந்தனிலே சீக்கிரமாய் நடந்து
பஞ்சவடி தீரத்திலே யிருந்தார் ரகுராமர்
36 ஸித்தாசிரமத்தில் ஜயந்தனுன காக்கை வதைசெய்து
அஸ்திரத்தா லதன்கண்ணை அறுத்துவிழ வடித்தார்
37 சூர்ப்பனகை மூக்கரிந்து கரதூஷணுளை வதைத்து
துஷ்டர்களை வெட்டியங்கே சூரத்தனங் காட்டி
38 மாரீசனை விழவடித்து வாலியைப்போய் வதைத்து
சேதுதன்னில் அணையைக்கட்டி லங்கைதனைச் சேர்ந்து
39 வாளரக்கன் முடியரிந்து மைதலியை மீட்டு
வாழும் விபீஷணர்க்கு மகுடபட்டங் கட்டி
40 அபவாதத்தால் மாதாவும் அனல்முழுகி ஏறி
களிப்புடனே காகுஸ்தனுர் திருவடியில் பணிந்தாள்
41 அடிபணிந்த சீதையுடன் அமர்ந்த ரதமேறி
(அடி) அணியழகி உனக்காக அடைத்த அணை என்ருர்
42 என்றுமந்த ஜானகிக்கு இங்குமங்கும் காட்டி
மஹாமுனிவர் பாரத்துவாஜர் கிரஹந்தனிலே வந்தார்

43 வனவாஸம் போகும்போது மஹாமுனிவரோடே
திரும்பரப்போ புஜிப்போமென்று சொன்னதொரு வாக்கியம்
44 தப்பாமல் புஜிக்கவேணும் மாருதியே இப்போ
என்தம்பி பரதருக்குச் சொல்லிவாரும் என்றார்
45 அந்தமான அயோத்திதன்னில் உட்புகுந்து நடந்து
(நான்) வந்த அடையாளந்தன்னைப் போயுரையு மென்றார்
46 அபிராமர் உரைக்கனுமே மாருதியும் கேட்டு
வாயுவேக மனோவேகமாக அங்கே பறந்து
47 அனலிலே விழவிருந்த பரதருக்கும் சொல்லி
மடுவில் நின்ற குகனுக்கும் வந்தனுமார் உரைத்தார்
48 பாலடிசிலும் புஜித்து தேவியுடன் இருக்கும்
பரந்தர்ம னிடத்தில்வந்து சேர்ந்தனுமான் இருந்தார்
49 தாசரதி தேவியுடன் ஸகலகவி சூழ
தம்பியருங் கூடவர அயோத்திவந்து சேர்ந்தார்
50 தாய்மார்கள் மூவர்களைச் சரணமென்று பணிந்தார்"
மாமிமார் மூவர்களை வணங்கி நின்றாள் மாது
51 பணிந்ததொரு மைதலியைப் பரிவுடனே எடுத்து
சீருடைய ரகுபதியைச் சேர்த்தணைத்துக் கொண்டாள்
52 மலர்ந்தவிழிப் புருவத்தின்மேல் பூமிகிள்ளி யிட்டு
மைந்தருக்கும் மைதலிக்கும் திருவந்திக்காப் பெடுத்தாள்
53 கௌஸலையும் ரகுபதியை மடிமேலணைத்துக் கொண்டு
கமலதளக் கண்கள் இரண்டும் கலங்கமெத்த அழுதாள்
54 கைகேயி வார்த்தைகேட்டு (உங்க)ளையர் கானகத்துக் கனுப்பி
ஸ்ரீராமா ராமாவென்று ஜீவனையு மிழந்தார்
55 சீருடைய மன்னவரும் திரும்பி வாராரோ
மகிமையுள்ள தசரதரும் (இப்போ) வந்து பாராரோ
56 (என்று) மாதா கௌஸலையம்மன் மனந்தளர்ந்து சொல்ல
மகானுபாவர் ரகுபதியும் மறுவசனம் சொல்வார்
57 (அம்மா) மாதுர்வாக்கியம் பிதுர்வாக்கியம் தப்பாமல் நாங்கள்
பரிபாலனம் பண்ணவென்று வனந்தனிலே நடந்தோம்
58 அந்தமான வனந்தாண்டி ஆரணியம் அடைந்து
அரக்கர்களை சம்ஹரித்து அருங்கிளியை மீட்டோம்

59 மஹாமுனிவர் ஆசியினால் அயோத்திவந்து சேர்ந்தோம்
மாதாவே நீருமிப்போ மனந்தளர வேண்டாம்(என்று)
60 பணிந்தெழுந்த மக்களைப் பரிவுடனே வாழ்த்தி
மரவுரியைத் தான்களைந்து திரிசடையைப் பிரித்து
61 மைதலிக்கும் ராமருக்கும் வாஸனெண்ணெய் சாத்தி
மணமுடைய அரப்பரைத்து மஞ்சள் நீராட்டி
(லாலி ஸ்ரீரகுராம—லாலி ஜயராமா—லாலி கோஸலராமா
லாலி ஸீதாராமா—லாலி என்ற மெட்டில் 74-வரையில் பாடலாம்)
62 மாதளம்பூப் பட்டுடுத்தி வகைபணதி பூட்டி
மைதலியாள் பூங்குழலை வகுந்து துவலாற்றி
63 வர்ணமுள்ள பெட்டியிலே பலபணதி எடுத்து
அன்னநடை ஸீதையர்க்கு அலங்காரஞ் செய்தாள்
64 வகைவகையாய் மாலைதனை மைதலியுந் தரித்து
ஜயவீரர் ராமருடன் சிங்காஸன மிருந்தாள்
65 வஸிஷ்டமுனி கையாலே மகுடந்தனைச் சூட்டி
மைதலிக்கும் ராமருக்கும் மதித்தபட்டங் கட்டி
66 இன்பமான ஸீதையுடன் ராகவருங் கூடி
எதிரற்றதோர் போகந்தன்னை அனுபவித்து வாழ்ந்தார்
67 உமையுடனே சங்கரனார் ஒன்று யிருந்தாப்போல்
அயன்நாவில் சரஸ்வதியும் அமர்ந்து இருந்தாப்போல்
68 மாலுடைய திருமார்பில் மாது மிருந்தாப்போல்
ராகவரும் ஜானகியும் நலம்பெறவே வாழ்ந்தார்
69 அவனிதன்னில் பெரிதான அயோத்தி நகர்தன்னை
அபிராமர் தம்பியுடன் அரசாளும் போது
70 (நல்ல)தன தானியங்கள் உண்டாம் தர்மங்களு முண்டாம்
சகலபேர்க்கு மிடர்தீர ஸந்தான முண்டாம்
71 ரசமான கனிகளுண்டாம் யாகங்களு முண்டாம்
சதுர்வேத மோதுகிற மறையோரு முண்டாம்
72 பசுபாக்கியங்க ளுண்டாம் குளிர்காற்று முண்டாம்
பலதினமும் தப்பாதே பஞ்சயக்கியம் உண்டாம்
73 வளமையான பயிர்களுண்டாம் மலரதிகமுண்டாம்
மாதம்ஒன்றுந் தப்பாதே மாரிமூன்று முண்டாம்

74 சுகசரீராளுடன் கூட சோரர்க ளில்லாதே
(அந்த) அழகான பூமிதன்னை அபிராம ராண்டார்.

சீதாதேவி கர்ப்பமுண்டாகுதல்.

75 மகிமையுள்ள ரகுபதியும் மண்ணாளும் போது
மைந்தர் நமக்கில்லை யென்று மனதுமெத்தச் சலித்து
76 வழிவழியாய் ரகுவம்சம் மாருமல் ஆண்டோம்
(என்று) மைதலியும் ராகவரும் மனஸ்தாப மடைந்தாள்
77 சலிப்புடனே இருக்கும்போது தாசரதி தேவி
புவனமுழு தாள்வதற்குப் புத்திர னுண்டானாள்
78 (அம்மன்) அழகான இடைதுவண்டு அன்ன மிறங்காதே
மதிமுகமும் வர்ணந்தட்டி வாந்திகளும் பண்ணி
79 குறுவேர்வைகள் வேர்க்க கோதையின் வாய்உலர
செங்கமல முகம்வெளுக்கச் சிற்றுடம்பு துவள
80 நீளமுள்ள கருங்குழலாள் நித்திரைகள் பண்ணி
மைதலியாள் ஜானகியும் மசக்கைகொண்டு இருந்தாள்
81 கௌசலையும் ராகவரும் கண்டுமன மகிழ்ந்து
குடி விளங்க குமரன் நமக்குண்டாயிற்றென் றெண்ணி
82 கலியாணம் வந்ததென்று கருத்தில்மிக மகிழ்ந்து
கனமுடைய ஜனகருக்கும் சேதிசொல்லி விட்டார்
83 சந்தோஷ வார்த்தைதனைக் கேட்டுமந்த ஜனகர்
கொம்பனையாள் ஜானகியைக் கூட்டிவர எண்ணி
84 அழகான அஞ்சுதிங்கள் ஆன மைதலிக்கு
மண்மகளார் மைதலிக்கு வளைகாப்பு மிடவே
85 ஜனகருக்குத் தங்கையரும் சீதையரை அழைக்கச்
செம்பொன்மணித் தேரேறி அயோத்திவந்து சேர்ந்தாள்
86 அருகில்வந்து சீதையரும் அத்தை அடிபணிய
பரிவுடனே மனமகிழ்ந்து வாழ்த்தியவள் இருந்தாள்
87 வண்ணமுள்ள மைதலிக்கு வளைகாப்பு மிடவே
அன்புடைய ஜனகரிடம் அனுப்பவேணு மென்றாள்
88 ஆதிர்குநாதருடன் தாயார் கௌஸலையும்
அதிபிரியமாய் மகிழ்ந்து ஜானகியை அழைத்து

89 தாயார்தன் மாளிகைக்குப் போய்வாரு மென்ன
அப்படியே போய்வாரேன் என்று அடிபணிந்தாள்
90 அடிபணிந்த மருமகளைப் பரிவுடனே வாழ்த்தி
பூமிகிள்ளிக் காப்புமிட்டு போகவிடை கொடுத்தாள்
91 போகவிடை கொடுக்கலுமே புண்ணியனார் தேவி
செம்பொன்மணித் தேரேறி மிதிலைவந்து சேர்ந்தாள்.

ஜானகிக்கு வளைகாப்பிடல்.

92 தந்தை ஜனகர் கண்டு சந்தோஷப்பட்டு
அடிபணிந்த திருமகளைப் பரிவுடனே வாழ்த்தி
93 தந்தையரும் தாயாரும் சிந்தைதன்னில் மகிழ்ந்து
மங்களமாம் ஜானகிக்கு வளைகாப்பு மிடவே
94 தங்கத்தினால் காப்படித்தாள் ஜானகியாள் தனக்கு
பொன்னாலே செளிபூடம் பூங்கிளிக்குச் செய்தாள்
95 கணையாழி மோதிரமும் கனகப் பாட்டிலியும்
காலாழி பீலாழி செய்துகொண்டு வந்தாள்
96 மகிழ்ந்துவந்த அத்தையரும் வாங்கி உள்ளேவைத்து
புகழுடனே காப்படுக்க நல்லநாள் பார்த்தாள்
97 வடிவுடைய மைதலிக்கு மருதாணி இட்டு
கோப்புடைய ஜானகிக்குக் கொம்பரக்குப் போட்டாள்
98 மல்லிகையும் சம்பகமும் முடித்த குழலவிழ்த்து
மைதலியாள் சீதையர்க்கு வாஸஎண்ணெய் சாத்தி
99 மணமுடைய அரப்பரைத்து மஞ்சள் நீராட்டி
இந்திரவாளிப் பட்டெடுத்து (சீதை) இடைதனிலே உடுத்தாள்
(வாராய் ருக்மணிதேவி என்ற நலங்குமெட்டில்
112-வரையில் பாடலாம்.)
100 பால் முழிக்கு மைஎழுதி அரும்புகுழல் பின்னி
சுந்தரனார் நாயகிக்கு திலகப்பொட்டு மிட்டாள்
101 வண்ணமுள்ள பெட்டியிலே பலபணதி எடுத்து
அன்புடைய சீதையர்க்கு அலங்காரஞ் செய்தாள்
102 சூர்மையாகத் தரைமெழுகி கோலந்தனை இட்டு
நிறைநாழி முத்தளந்து நெய்விளக்கு மேற்றி
103 பொற்கொடியாள் ஜானகியும் புன்முறுவலுடனே
பொன்னாஸனந்தனிலே நேர்கிழக்கா யிருந்தாள்

104 அங்கொருத்தி அருந்ததியும் சீக்கிரமா யெழுந்து
அருகம்புல்லும் அட்சதையும் அழகுடனே எடுத்து
105 பாலுடனே பச்சரிசி பத்தினிமார் கொண்டு
ஆண்பிள்ளையைப் பெறுவீர்என்று அச்சுதமும் தெளித்தார்
106 அச்சுதமும் தெளித்தபின்பு எழுந்தொருத்தி குனிந்து
பொன்னோலை எழுத்தாணி புஸ்தகத்தை எடுக்க
107 மங்களமாம் சீதையரும் மனமகிழ்ச்சி யடைந்து
மந்த ஹாஸத்துடனே மடிதனிலே கொண்டாள்
108 மங்களமாம் வாத்தியங்கள் பதினெட்டும் முழங்க
மங்கையர்கள் வளையநின்று மங்களங்கள் பாட
109 வளையடுக்கிக் காப்புமிட்டாள் மைதலியாள் தனக்கு
புகழுடனே பூச்சூட்டினாள் பொற்கொடியாள் தனக்கு
110 தாம்பூலம் இலையடைக்காய் சகலருக்கும் கொடுத்து
சர்க்கரைகள் பழத்துடனே தான்வழங்கி நின்றாள்
111 திருப்தியுடன் சித்திரான்னம் சேர்ந்துமவாள் புஜித்து
அத்தனைபேர் மங்கைமாரும் அகமகிழ்ந்து இருந்தாள்
112 அன்புடைய தந்தையரின் அடிமலரை வணங்கி
இன்பமுள்ள அயோத்திநகர் போகவிடை கேட்டாள்
113 மைதலியாள் ஜானகிக்கு வரிசைரொம்பக் கொடுத்து
மன்னரந்த ஜனகராஜா வாழ்த்திவிடை யளித்தார்
114 செம்பொன் மணித்தேரேறித் தோழிமார்கள் சூழ
அன்புடனே அயோத்திவந்து அபிராமரைப் பணிந்தாள்
115 அந்தமுள்ள மாமிமாரின் அடிதனிலே வணங்க
வந்துநின்ற ஜானகியை வாழ்த்திமன மகிழ்ந்தாள்
116 பரிவுடனே ரகுராமர் பரதர்தம்மை அழைத்து
அறமுனிவர் வசிஷ்டருட அனுமதி யின்படியே
117 ஸீமந்தக் கலியாண ஓலைதன்னை எழுதி
சீக்கிரமாய் ஜனகருக்குப் போகவிடு மென்றார்
118 ஸ்ரீராமர் உரைக்கலுமே சூரபர தாழ்வார்
சீரான கணக்கர் தம்மைச் சீக்கிரமா யழைத்து
119 வாய்த்தசபை யோருடனே மந்திரி மாருடனே
ஆக்ஷியான மண்டபத்தில் காக்ஷிபெற விருந்து
120 ஸ்ரீகோசந்தனை யெடுத்துத் தேசகாலம் பார்த்து
நாள் நல்லதா யமைத்து நல்முகூர்த்தம் வைத்தார்

121 வெள்ளியோலை தனையெடுத்து விரும்பி ரண்டும்சீவி
தங்கப்பொன் ஞோலைகளின் தலைப்புறங்கள் நறுக்கி
122 மணிபதித்த எழுத்தாணி வலக்கையிலே பிடித்து
வகைவகையாய் வாசகங்கள் மணிப்பரதர் எழுதி
123 ஒச்சமில்லா சோபனத்தை ஓலையிலே எழுதி
தொட்டுமஞ்சள் தனைத்தடவி தூதர்கையில் கொடுத்தார்
124 வாங்கியந்தத் தூதர்களும் வெகுபிரியத் தோடு
பலபேர்கள் வாழுகின்ற பட்டணங்கள் சென்று
125 ஸ்ரீராமர் கலியாணம் திக்கெங்கு மறிய
புகழ்வீரர் கலியாணம் பூமியெங்கும் உரைத்தார்
126 ஸ்ரீமிதிலை தனில்புகுந்து ஜனகருக்குச் சொல்லி
ஸ்ரீராமர் தூதர்களும் தண்டனிட்டு இருந்தார்
127 ஜனகர் சதானந்தருடன் தாமிருந்த கொலுவில்
(அவர்) கனிவாயும் முறுவலித்துக் களிப்புடனே உரைப்பர்
128 தாடகையின் தலையரிந்த தாசரதி ராமர்
ஜானகி மனோகரனார் மனஸ்தாபமது தீர்ந்தார்
129 தாசரதி ராமருட தம்பி பரதாழ்வார்
சதுராக ஓலைதன்னை எழுதிவர விட்டார்
130 மங்களங்கள் சொன்னவர்க்கு வெகுமதிகள் கொடுத்து
மன்னரந்த ஜனகராஜர் மந்திரிமா ருடனே
131 (என்) பொற்கொடிக்கு அங்கமணி எடுக்க நாள்பாரீர்
(என்று) புகழுடைய ராஜாவும் சொல்லி வீற்றிருந்தார்.

மைதலியாள் ஸீமந்தத்திற்கு ஜனகர் வருதல்

132 ஆனைமேல் அங்கமணி அழகாக நிறைத்தார்
குதிரைமேல் அங்கமணி கோப்பாக எடுத்தார்
133 ஜனகர் சதானந்தருடன் தேவியுடன் கூட
சீருடைய அயோத்தி தன்னில் வந்துமவர் சேர்ந்தார்
134 ஜனகருடைய வரவுதன்னைத் தூதர்வந்து சொல்ல
ஸ்ரீராமர் அதுகேட்டுச் சிந்தைமெத்த மகிழ்ந்து
135 (தம்பி) வாய்த்தபுகழ் ஜனகராஜா (தன்) மாதுடனே வாரார்
(உன்) மணிக்கடகக் கைக்கொடுத்து வரவழையு மென்றார்
136 ஸ்ரீராமர் ஏவலுமே ஸ்ரீபரதர் நடந்து
செம்பொன்மணித் தேங்காயைக் கைகொடுத்து அழைத்தார்

(ஹெச்சரிகை மெட்டில் 147-வரையில் பாடலாம்)

137 அழகா ஸனத்திலிருத்தி அள்ளி மலர் தூவி
அபிராமரும் தம்பியரும் அடிவணங்கி இருந்தார்

138 சித்தடியாள் ஜானகியும் சிலம்பு கொஞ்ச நடந்து
செல்வமுள்ள தங்கையரும் தானும் வந்து பணிந்தாள்

139 மங்கையர்கள் நாலுபேரும் மாதா அடிபணிய
மைக்குழலை முகந்துகொண்டு மாதுமெடுத் தணைத்தாள்

140 பூரித்துமே மனமகிழ்ந்து புகழ்வீரர் நால்வர்
பொன்பூவைக் காதில்வைத்து மாமியடி பணிந்தார்

141 இலையுடனே பாக்குகளும் ஏலங் கற்பூரம்
வரிசையுடனே கொடுத்து வாழ்த்திமன மகிழ்ந்தாள்

142 நல்லிடையில் பீதாம்பரம் நாலுதிக்கும் விளங்க
மாணிக்கக்கிரீடம் மின்ன வெகுபணதி யசைய

143 மாணிக்கத்தால் மோதிரங்கள் வகைவகையாய் மின்ன
வந்தசபை யோர்கள் தம்மை கையமர்த்தும் அழகும்

144 மஹாலக்ஷ்மி வீற்றிருக்கும் வலமார்பின் அழகும்
மணவாள ராமர்தன்னை மாமியருங் கண்டு

145 (இந்த) காகுஸ்த ராகவரை கணவராக அடைய
(என்) காரிகையாள் என்ன தவம் செய்தாளோ முன்னே

146 (என்) மைதலியாள் ஜானகியை மணமாலை சூட
மன்னர்ராமர் பாக்கியங்கள் செய்தாரோ முன்னே

147 (என்று) காகுஸ்தரை சீதையரை கண்டுமன மகிழ்ந்து
கலியாணி தேவியரும் களித்துப் பார்த்திருந்தாள்

148 ஸ்ரீராமரைப் பயின்றெடுத்த கௌசலை மாதாவும்
செம்பவழ வாய்திறந்து சுமித்திரையோ டுரைப்பாள்

149 அபிராமர் தேவியுட அன்புள்ள மாதரவை
(நம்ம) சித்திரப்பொன் கூடத்திற்குச் சென்றழையு மென்றாள்

150 கௌசலையும் ஏவலுமே சுமித்திரையு மெழுந்து
காக்ஷியுள்ள அரண்மனையின் தாசிமாரை யழைத்து

151 பளிங்குப்பொன் னுலிழைத்து பட்டுமேல் கட்டி
பவழத்தினுல் தூண்நிறுத்தி பன்னீர்கள் தெளித்து

152 தங்கப் பொடிகள் தூவி சந்தனத்தால் மெழுகி
முத்தாலே கோலமிட்டு முன்காவி யிட்டு

153 சித்திரமும் பொன்பூவும் சேர்ந்தழகாய் மின்ன
தூண்டா விளக்கெரிய வண்டுகீதம் பாட

154 சித்திரமாய்ப் பஞ்சவர்ணக் கிளிகளது கொஞ்சும்
சோதிரகு ராமருட மண்டபத்தின் நடுவே
155 கலியாணி தேவியரைக் கடுக அழையென்று
காரிகையாள் சுமித்திரையும் தாசியுடன் சொன்னாள்
156 (தாசி) செம்பொன்மணி மாலைகொண்டு சென்றெதிரே கண்டு
வாருமம்மா அரண்மனைக்கு என்றுமவள் அழைத்தாள்
157 சிலம்புடனே பாடகமும் சலசலவென் றசைய
செம்பொன்மணி ஆபரணம் பொன்பதக்கம் மின்ன
158 ஜாதிரத்தினத் தாலிழைத்த தங்கமண்ட பத்தில்
தலைவாசல் தன்னில்அவள் தட்டாமல் நுழைந்தாள்
190 அங்கிருந்த சுமங்கலிமார் அருகினிலே வந்து
அன்புடனே ஆரத்திக் காப்புமவாள் எடுத்தாள்
156 சாதிக்காய் கற்பூரம் தாம்பூலத் துடனே
தாதிமார்கள் தானெடுத்துக் கைநிரம்பக் கொடுத்தாள்
161 கோலவளை தான்குலுங்கக் கொடிமணிகள் அசைய
கொம்பனையாள் கலியாணி கைதனிலே வாங்கி
162 மைதலியாள் ஜானகியை அருகில்வைத்துக் கொண்டு
வண்ணமுள்ள பெண்களுடன் மாது வீற்றிருந்தாள்.

கலியாணிதேவி கௌஸல்யா தேவிக்கு உபசாரஞ் சொல்லுதல்.

163 ஸ்ரீராமரைப் பயின்றெடுத்த கௌஸலை மாதாவும்
செம்பவழ வாய்திறந்து சுமித்திரையோ டுரைப்பாள்
164 (நம்ம) செல்வமுள்ள தசரதனுர் சிவலோகஞ் சேர
(நாம்) செம்பொன்மணி ஆபரணம் திருவாங்கின பின்பு
165 ஜனகருட பாரியரை சீதையின் மாதாவை
அன்றுமுதல் இன்றுவரை கண்டதில்லை யம்மா
166 சீருடைய அயோத்தியிலே செய்யும்கர்மம் நடந்து
ஸ்ரீராமர் திருக்கையினுல் செய்யுங்கிரியை செய்தால்
167 வாய்த்தபுகழ் ஜனகராஜா மாதுடனே வந்து
வரிசையுள்ள சீர்செய்ய வந்திருப்பர் அம்மா
168 (நம்ம) ஜோதி ரகுராமருட கலியாணந் தன்னில்
துக்கமென்று சொன்னுக்கால் வெட்கமன்றோ அம்மா
169 சொர்ணவடி வானதொரு மேனியெங்கும் வேர்க்க
சோதிவர்ணப் பட்டாலே தேகமெங்கும் போர்த்தி

170 பத்துலக்ஷம் பொன்பெற்ற பட்டுமேல் விளங்க
பசும்பொன்னால் கணையாழி கைதனிலே மின்ன
171 சீருடைய சுமித்திரையைக் கைபிடித்துக் கொண்டு
தேன்மொழியார் தாசியரை முன்கொண்டு நடந்தாள்
172 அபிராமர் மாதாவின் வரவுகண்டு தேவி
அழகாசனத் தைவிட்டு எழுந்தெதிரே வந்தாள்
173 செம்பொன்மணி யாபரணம் திக்கெங்கும் விளங்க
சிலம்புடனே பாடகமும் சேர்ந்தார்க்கப் பணிந்தாள்
174 பணிந்தஜனகர் பாரியரைப் பார்த்துக் கௌஸலையும்
பார்முழுதும் ஆண்டிடுவீர் வாழ்ந்திடுவீர் அம்மா
175 சீருடைய மிதிலையிலே செழிப்புடனே இருந்து
ஜனகராஜா திருத்தோளைப் பிரியாமலே வாழ்வீர்
176 மைந்தர் பதினாறும்பெற்று மங்கலியம் பெருகி
வாழ்ந்திடுவீர் என்றுசொல்லி கௌஸலை வாழ்த்தினாள்
177 சிவந்தெழுந்த சூரியன்போல் தேவிஎதிர் நின்று
செம்பவழ வாய்திறந்து கலியாணி உரைப்பாள்
178 (உங்கள்) செல்வமுள்ள தசரதனார் சிவலோகஞ் சேர்ந்த
அன்றுமுதல் இன்றுவரை கண்டதில்லை நானும்
179 (என்) சிற்றிடையாள் ஜானகியும் இல்லாத மனையில்
சென்றுஉம்மைக் காண்பதுவும் எப்படி என்றிருந்தேன்
180 (என்) மாற்றரியாப் பாலகியும் வனவாசம் போன
(அந்த) மனஸ்தாபத்தாலே யன்றோ வாராமலிருந்தேன்
181 கட்டிநின்ற பொற்காப்பும் மாலை புலராமுன்
கருத்துடைய லக்ஷ்மணரும் கூடவனம் நடந்தார்
182 அம்பும்வில்லும் தானெடுத்து லக்ஷ்மணரும் போக
(என்) அருங்கிளியாள் ஊர்மிளையும் அருஞ்சிறையி லிருந்தாள்
183 பூமியிலே தான்பிறந்த பொற்கொடி சீதாவை
போற்றியே நான்வளர்த்தேன் எழுத்தை யறியாதே
174 கலப்பையோடு குழியினுள்ளே வந்துதித்தா ளென்று
கலியுகத்து மானிடர்கள் அதிசயமாய்ச் சொல்வாள்
185 (என்) கோப்புடைய மாளிகையிற் குடிகொண்ட செல்வம்
கொம்பனையின் நல்விசேஷம் என்றுநா லிருந்தேன்.

186 (என்) தாக்குடைய மாளிகையில் தையல்வந்து பிறக்க
சந்தானம் சம்பத்தும் சகலமும் உண்டாச்சு
187 செல்வமுள்ள சீதையரை நினைத்து மனமுருகி
சீர்செய்யும் தந்தையரும் மனந்தளர்ந்தா ரம்மா
188 (என்று) கலியாணிதேவி சொல்லிக் கலங்கிநிற்கும் போது
கௌசல்யா தேவியம்மன் கனிந்துமப்போ உரைப்பாள்
189 (என்) லக்ஷ்மியும் வனம்போகி நெடுங்கானல் அலைய
நாங்கள் நீவியன்றே பூமியிலே நெஞ்சுநிலை தரித்தோம்
190 வாய்த்ததொரு மிதிலையிலே நின்று வில்லை முறித்து
மன்னாரராமர் தேவியுடன் மகிழ்ந்துவந்த போது
191 (என்) மைதலியும் ராகவரும் வாழ்ந்திருக்கும்போது
மகுடாபி ஷேகஞ்செய்ய மன்னவர் கோடித்தார்
192 அரிதான கைகையவள் கேட்ட வரத்தாலே
(எங்கள்) அன்பான தசரதனுர் ஆவியது இழந்தார்
193 கன்னெஞ்சுக் கூனியுட கற்பனையி னலே
கழட்டினேம் மங்கலியம் கடுஞ்சிறையி லிருந்தோம்
194 வாய்த்ததொரு ஸ்ரீராமர் மணிமகுடம் சூட
வாய்மையுள்ள தசரதனுர் அரசுநிலை நிறுத்த
195 காக்ஷியுள்ள பந்தலிலே காடைவிளக் கெரிய
கற்பூரம் ஹாரத்தி எடுக்க அதிருஷ்டமற்றேம்
196 கௌசல்யா தேவியம்மன் கண்கலங்கிச் சொல்ல
கலியாணி தேவியம்மன் கண்டுடனே சொல்வாள்
197 (அம்மா) காக்ஷியுள்ள தசரதனுர் காணுத காட்சி
கௌசல்யா தேவியரே கண்குளிரப் பாரும்
198 (என்று) கலியாணி தேவியரும் கௌசலை மாதாவும்
கனக சிங்காஸனத்திற் கலந்து வீற்றிருந்தாள்.

ஸ்ரீராமர் ஸீமந்தக் கல்யாணம்.

199 இராமருட ஸீமந்த நாளுமப்போ வரவே
நாடுநகர் ஜனங்களெல்லாம் நலம்பெறவே வந்தாள்
200 புண்ணியமுனி தேவர்கட்கும் போத விபீஷணர்க்கும்
அடர்ந்தராஜ ரிஷிகளுக்கும் ஆசனங்கள் போட்டாள்
201 வந்ததொரு ராஜர்களும் மன்னர் சுக்கிரீவரும்
அந்தமான விடுதிகளில் அமர்ந்துமவாள் இருந்தாள்

(இது முதல் 222-வரையில் கௌரீகல்யாணம் வைபோகமே, என்னும் பல்லவிக்குச் சந்தையாகப் பாடலாம்.)

202 சுந்தரமாய் அரண்மனையில் பந்தலலங் கரித்து
துலக்கமுள்ள வீதிகளில் தோரணங்கள் கட்டி
203 குலையுடனே வாழைகளைக் கொண்டுவந்து நிறுத்திக்
கோப்புடைய பந்தலுக்கு மேற்கட்டுகள் கட்டி
204 மேற்கட்டுகள் கட்டிஎங்கும் விடுபூக்கள் சொரிந்து
தோரணங்கள் தன்னுடனே தொடுத்த பூக்கள் கட்டி
205 மல்லிகையும் செண்பகமும் வாய்த்தவெட்டி வேரும்
வகையான இருவாட்சி வகைவகையாய்த் தெர்டுத்து
206 பலவகையாம் புஷ்பங்களைப் பாங்காகத் தொடுத்து
பந்தலெங்கும் தூக்கிவிட்டாள் பரிமளங்கள் வீச
207 பட்டாலே அலங்கரித்த பச்சைப்பந்தல் தன்னில்
முத்தாலே சரந்தொடுத்து முடியத்தொங்கவிட்டாள்
208 தரணியெங்கும் விளங்கும்நல்ல சந்திரகாந்திப் பட்டை
(அந்த) இடம்பெரிய பந்தலிலே எல்லோருக்கும் விரித்தாள்
209 அங்கேயுள்ள சுமங்கலிமார் அழகாக வந்து
சங்குபோல மாவிடித்துச் சதுராய்க் கோலமிட்டாள்
210 பசும்பொன்னாலே யமைத்த படித்தளங்க ளெல்லாம்
பச்சைக்கல்லும் முத்துமாகப் படிக்குப்படி பதித்தாள்
211 பாடகரும் புலவர்களும் பாடிநின்று ஸ்துதிக்க
பாகவதாள் தாளம்போட நாகஸ்வரமுழங்க
212 இராமருட கலியாணம் நாலுதிக்கும் முழங்க
புகழ்வீரர் கலியாணம் பிரஜைகளெல்லாம் மகிழ
213 மைதலிக்கும் ராகவர்க்கும் வாஸஎண்ணெய் சாத்தி
மஞ்சள்நீ ராட்டியவாள் வெண்பட்டால் துடைத்தாள்
214 மைதலியாள் பூங்குழலை வகுந்து துவலாற்றி
வாஸமுள்ள எண்ணெய்யிட்டு வாரியவாள் முடித்தாள்
215 வர்ணமுள்ள பெட்டிதன்னில் வகைபணதி எடுத்து
எண்ணவொண்ணாப் பணதிகளை எடுத்து அலங்கரித்தாள்
216 இந்திரவாளிப் பட்டெடுத்து இடைதனிலே உடுத்தி
அந்தமான சுந்தரிமார் ஆரத்திக் காப்பெடுத்தார்
217 (ராமர்) சண்டையிடும் இருபுஜத்தில் தாவடங்கள் புரள
சுந்தரனார் நெற்றிதனில் திருநாமம் விளங்க

218 நல்லவர்ணப் பீதாம்பரம் நாலுதிக்கும் விளங்க
மாணிக்கக் கிரீடமின்ன வகைபணதி அசைய
219 கோத்தமுத்து மாலைமின்ன குறுவேர்வை வேர்க்க
குண்டலங்கள் சோதிவிட கோதண்ட மெழுந்து
220 மைதலியும் ராகவரும் மணைதனிலே இருக்க
அறமுனி வசிஷ்டர்வந்து அழகுஹோமம் வளர்த்தார்
221 மஹாமுனிவர் இழைநூலை மஞ்சளிலே நனைத்து
மன்னர்ராமர் கைதனிலே வாழ்த்தியவர் கொடுத்தார்
222 காகுஸ்தனார் இழைநூலைக் கைதனிலே வாங்கி
காரிகையாள் கரந்தனிலே காப்பதுபோ லிசைத்தார்.

(இதுமுதல் 233 வரையில் அல்லோனே என்ற
பல்லவிக்குச் சந்தையாகப் பாடலாம்.)

223 அனைவர்களும் உகந்துநிற்க ஜனகர் மனமகிழ்ந்து
அழகுபட் டாடைதனை முனிவரிடம் கொடுத்தார்
224 மங்களமாய்ப் பதினெட்டு வாத்தியங்கள்முழங்க
மங்கையர்கள் இருபுறமும் மங்களங்கள் பாட
225 மஹாமுனிவர் பட்டாடைதனை வாங்கிக் கொண்டு
மங்களமாய் அங்கேயொரு கன்னிகையை யழைத்து
226 அழகான அத்திமொக்கு ஆலமொக்கு கொணர்ந்து
அழகுபொன் னம்மியிலே நறுக்கவென்று கொடுத்தார்
227 நறுக்கிமொக்குக் கொடுக்கவுமே வசிஷ்டமுனி வாங்கி
களிப்புடனே பட்டாடை தலைப்பினுள்ளே முடிந்து
228 (ராமா) மதித்தகடல் ஏழுமாள மைந்தர்களைப் பெறுவீர்
(என்று) வாழ்த்தியே ராமரிடம் வசிஷ்டமுனி கொடுத்தார்
229 வர்ணமுள்ள பட்டாலே வளையத்திரைபிடித்து
மந்திரங்கள் உச்சரிக்க வாத்தியங்கள் முழங்க
230 இந்துமதி வாழ்முகத்தை இடதுகையால் நிமிர்த்தி
மைதலியாள் தன்னுடைய வலமூக்கில் பிழிந்தார்
231 பிழிந்தபின்பு ஆடைதன்னை வசிஷ்டமுனி வாங்கி
ஜானகியாள் கைக்கொடுத்துத் தரித்துவாரு மென்றார்
232 வசிஷ்டரிஷி கொடுக்கவுமே மைதலியாள் வாங்கி
முடிந்திருந்த பட்டாடைத் தலைப்பைமேலே யுடுத்தாள்
233 தாய்மார்கள் மூவர்களை தாசரதி பணிந்தார்
மாமியார் மூவர்களை வணங்கிநின்றாள் மாது

234 வணங்கிநின்ற மைதலியைக் கைகேயி பார்த்து
பார்முழுது மாண்டிடுவீர் வாழ்ந்திடுவீர் அம்மா
235 மைந்தர் பதினாறும்பெற்று மகிழ்ந்திடுவீ ரம்மா
மங்கலியம் தழைத்தோங்க வாழ்ந்திடுவீ ரம்மா
236 மாண்டொளித்த தசரதரை மைந்தராய்ப் பெறுவாய் [ண்டாள்
(என்று) நாட்டுப்பெண்ணை மிகவாழ்த்திமடியில் வைத்துக்கொ
237 (இதை) இளையவருந் தான் கேட்டுக் கடுங்கோபங் கொண்டு
(அம்மா) மாண்டொளித்த தசரதரை மைந்தராய்ப் பெற்றால்
238 தப்பாமல் மூன்றுவரம் தாயேநீர் கேட்டு
ஈடனைய எங்களையும் கானகத்துக் கனுப்பும்
239 (என்று) இளையவர் சொல்லனுமே ராகவரும் கேட்டு
மனதுமிகத் தான்வருந்தி மறுவார்த்தை சொல்வர்
240 (தம்பி) அடிநாளைச் சாபமது அயனுடைய விருப்பம்
அடிக்கடிக்குச் சொல்லவேண்டாம் என் ஆனதம்பி என்றார்
241 மாமியார் மூவர்களை வணங்கியே எழுந்து
வசிஷ்டருடன் ஜனகரையும் வணங்கியே தொழுதாள்
242 கௌஸல்யும் சுமித்திரையும் கைகேயியும் வாழ்த்தி
மைதலியாள் மணக்கிருந்த காக்ஷிதன்னைப் பார்த்து
243 (அம்மன்) மாசற்ற வடிவழகும் மதிமுகத்தி னொளியும்
பூசிநின்ற சாந்தொளியும் பொட்டுநெற்றி யழகும்
244 திருக்கழுத்துப் பூஷணமும் திருமங் கலியமும்
சேர்ந்தகொடி காரைகளும் முத்துமாலையழகும்
245 செவ்விளநீர்க்குலைகள் சீறிப் பழுத்தாற்போல்
திருமார்பு ஸ்தனத்தழகும் திருமருங்கி னழகும்
246 கைத்தலத்திலே யணிந்த பவழ வளையழகும்
இடையினுள்ள பட்டாடை மேகலையினழகும்
247 காலாழி பீலியுடன் நூபுரங்க ளணிந்த
காரிகையாள் சீதைதன்னைக் கண்டுமவள் மகிழ்ந்தாள்
248 கனகமணிக் கெண்டியிலே ஜலங்கொணர்ந்து கொடுக்க
(சீதை) கனிவாயைக் கொப்பளித்து கைகாலை யலம்பி
249 துலக்கமுள்ள சீதையரும் (சுத்த) ஆஜமன்யம் வாங்கி
இரக்கமுள்ள ரகுநாதர் வலப்புறம்போ யமர்ந்தார்
250 கைத்தலங்கள் மிகநோவக் கண்ணில் புகைசூழ
காசாம்பூ மலர்மேனி கன்றிமெத்தச் சிவக்க

251 இடையிற்பட்டுத் தான்கசங்க எங்கும் அனல்வீச
ஏற்றமுள்ள மார்பின்மாலை வாடித் துவண்டசைய
252 பூசினகஸ்தூரிசாந்து புழுங்கி வேர்த்தரும்ப
புகழுடைய ரகுராமர் ஓமம்பண்ணி இருந்தார்
253 கடைக்கண்ணால் சீதைதன்னைக் கண்டுமெத்த மகிழ்வர்
மந்திரமுந் தப்பாதே மகமுனியோ டுரைப்பர்
254 அக்ஷதையைத் தானெடுத்து அனைவரிடங் கொடுத்து
உத்தரியத் தொங்கல்தனை ஒளிபெறவே விரித்தார்
255 ஆசீர்வாதங்கள் செய்து அடர்ந்தமுனி தேவாள்
வேதத்தினாலே யவாள்மிக வாழ்த்திப் போட்டாள்
256 தலைப்பில்விழும் அக்ஷதையை தாசரதி வாங்கி
சிரசிலே தான்தரித்து சீதையர்க்கும் போட்டார்
257 தாய்மார்கள் கைக்கொடுத்து சரணமென்று பணிந்து
மாமனார் ஜனகருட மலரடியிற் பணிந்தார்
258 பணிந்தசீதா ராகவரைப் பார்த்துமந்த ஜனகர்
பரிவுடனே தான்வாழ்த்தி பிரியத்துட னுரைப்பார்
259 (ராமா)என்தனங்கள் தன்னை தரணிதன்னை தாசிபரிகரியும்
அடங்கலும் என்ஜானகிக்கு அங்கமணி வைத்தேன்
260 (நீர்) ஆனபடி ஆண்டுகொள்ளும் அபிராமா என்று
ஸ்ரீராமர் கரந்தனிலே ஜனகர்தாரை வார்த்தார்
261 அனைவர்களும் உகந்திருக்க அருந்ததிமார் கூடி
அபிராமர்க்கும் சீதையர்க்கும் ஆரத்திக்காப் பெடுத்தாள்
262 சீருடைய தம்பியரை ஸ்ரீராமர் அழைத்து
தாம்பூலம் பலதானம் சகலருக்கும் ஈயும்
263 ஈயுமென்று அண்ணர்சொல்ல இளிப்பரதர் உகந்து
தாம்பூலம் தக்ஷிணைகள் சகலருக்கும் கொடுத்தார்
264 காளமேகர் கலியாணம் காணவந்த பேர்க்கு
பாலடிசில் பருப்பமுது பதினாயிரம்பேர் சமைத்தார்
265 ராஜஅன்னம் சம்பாஅன்னம் நலம்பெறவே சமைத்து
காய்கறி வகைகளிலே அனேகமது திருத்தி
266 பாகமான பருப்பமுதும் தாளதங்க ளுடனே
போனகமும் பொரிக்கறியும் பாயஸமும் அமைத்தார்
267 ஆமவடை போளியுடன் அதிரச வகையும்
தேன்குழல் மனோஹரமும் சிற்றுண்டி களுடனே

268 முப்பழமும் அப்பளமும் பரமான்ன வகையும்
தேன்பாகும் சீனியுடன் சேரஅவாள் அமைத்தாள்

269 அழகான இலைபோட்டு அம்ருதநீர் தெளித்து
பரிவுடனே அனுமாரும் பாத்திரசுத்தி பண்ணினார்

270 புத்துருக்கு நெய்யெடுத்துத் தொன்னைகளில் நிரப்பி
அத்தனைபேர் மன்னவர்க்கும் அன்னம் பறிமாறி

271 கோலமணிக் கெண்டியிலே கொண்டுகங்கா ஜலத்தை
ஸ்ரீகிருஷ்ணனுக்கே பிரீதியென்று தத்தம் பண்ணினாரே

272 எங்கள்மீது கிருபையாகவே வந்தமறை யோர்காள்
உங்களுக்கு ஆனதுகள் ஒன்றுமிங்கே இல்லை

273 சாறுடனே பச்சடியும் ரஸசாதனத்தைக் கூட்டி
(நீங்கள்)எந்தவிதமானாலும் அமுதுசெய்யு மென்று

274 அன்புடனே உபசாரம் அபிராமர் உரைக்க
இன்பமுள்ள போஜனங்கள் எல்லாரும் செய்தாள்

ஸ்ரீராமர் கீர்த்தியைப் பரமேஸ்வரர் புகழ்தல்

275 முப்புரத்தை எரித்ததொரு முக்கண்ணனார் பிரம்ம
கப்பரையைக் கையிலேந்திப் பிச்சைபூந்த ஆண்டி

276 எப்பொழுதும் ஸ்துதிக்கவல்ல ஈஸ்வரனார் தாமும்
அற்புதமாம் ராகவரைப் பார்த்துமவர் உரைப்பர்

277 (இந்தப்)பதினாலு உலகத்திற்கு அதிபதியும் நீரே
(உம்ம)அவதாரலீலைகளை ஆரறியப் போறார்

278 முப்பத்து முக்கோடி தேவர்களுக் காக
அசுரர்குலம் களையவென்று அவனியிலே உதித்தீர்

279 தசரதனார் இடர்தீர்த்த தீரரகு ராமா
கௌசலையின் கலிதீர்த்த கலியாண மூர்த்தி

280 தவமுனியின் யாகந்தனைத் தப்பாமற் காத்து
அருங்கல்லைப் பெண்ணாக்கி அகலிசாபம் தீர்த்தீர்

281 மிதிலைதனிலே நடந்து வில்லெடுத்து முறித்து
சீதையரை மணம்புரிந்து சிந்தைமனம் மகிழ்ந்தீர்

282 மணிமகுடஞ் சூடவென்று மன்னவர் கோடிக்க
மாதாவும் கேட்டவரம் மனமகிழ்ந்து கிரகித்து

283 மரவுரியைத் தான்வாங்கி இடைதனிலே தரித்து
சீதையோடுந் தம்பியோடுஞ் சேர்ந்துவனம் நடந்தீர்

284 அடர்ந்தவனம் போம்போது அயோத்தியுள்ளோர் புலம்ப
தம்பியருந் தாமிருக்கார் தளரவேண்டா மென்றீர்
285 பரதர்வந்து தான்கேட்டுப் பரிதாபத்துடனே
(என்)அபிராமர் என்றுசொல்லி அழுதுகொண்டுவரவே
286 தவியாதே என்றுமந்தத் தம்பியரை அணைத்து
தந்தையார் விழுந்த துக்கம் தம்பியுடனுறி
287 செந்தாமரைத் திருவடியை ஸ்ரீபரதர்க் கீந்து
தம்பியரை அனுப்பிவைத்த சர்வேச மூர்த்தி
288 பஞ்சவடி தீரத்திலே பர்ணசாலை யருகே
மாரீசன் வந்தங்கே மானாக மேய
289 வணக்கமுள்ள மைதலியாள் மான்வேணு மென்க
மானின்பின்னே தொடர்ந்த மஹானுபாவ ரூபா
290 வாளரக்கன் வந்துமங்கே மைதலியை எடுத்து
அசோக வனந்தனிலே அருஞ்சிறையில் வைத்தான்
291 சதுரங்க சேனையுடன் அலைகடலைத் தாண்டி
அரக்க னிந்திரசித்தன் கும்ப கர்ணனையும் வதைத்து
292 விருப்பமுடனே கூட விபீஷணரைப் பார்த்து
அசுரசம்ஹார மெல்லாம் ஆச்சுது உம்மாலே
293 அயோத்திநகர்க் கெழுந்தருள அனுப்பவேணு மென்று
விடைகேட்க விபீஷணரும் மிகப்பிரியத் தோடு
294 அழகான அயோத்தியாபுரிக் கதிசயமதாக
எந்தஎந்த வஸ்துக்களை எடுத்துவர வென்றார்
295 விபீஷணரும் கேட்கவுமே மேகவர்ண நீரும்
(அங்கே) வேணுமென்ற வஸ்துக்களும் வெகுதனமு முண்டு
296 ஆனாலும் நீர்சொன்ன வாக்கியந் தப்பாதே
இந்தவானர சேனையெல்லாம் வெகுபிரயாசப்பட்டாள்
297 வானரங்களாலே நாமும் சாகரத்தைக் கடந்தோம்
(அவர்) மனங்குளிர வெகுமானம் வழங்குமென்று சொன்னீர்
298 அரக்கராஜன் அதுகேட்டு அதிகப்பிரியத்தோடு
கொந்தளப்பொன் சரக்கரையை கோப்புடனே திறந்து
299 மாணிக்கமும் முத்துக்களும் வைடூரியங்களும்
தங்கப்பொன் காசுகளும் தரந்தரமா யெடுத்து
300 வகைவகையாய்க் குவிக்கவுமே மனதுமெத்த மகிழ்ந்து
வானர சேனைதன்னை வரிசையாய் நிறுத்தி

301 அவரவர்க்கு வேணபடி வெகுதனங்களெடுத்து
(அவர்) தலைமேலே சுமக்குமட்டுந் தான்கொடுத்து மகிழ்ந்தீர்
302 அநேக நாளாயிருந்த குபேரன்தன் விமானம்
பட்டாலே தான்மூடிப் பலதிசையும் விளங்க
303 குந்தள மாணிக்கத்தாலே கொடுங்கையது சேர்த்து
வஜ்ரமணிக் கல்லாலே விதவிதமாயிழைத்து
304 தளதளென்னவே விளங்கும் தங்கவிமானத்தை
புஷ்பக விமானந்தன்னை பிரியத்துடன் கொணர்ந்தார்
305 (அந்த)சித்திரப்பூந் தேர்மேலே சேனையுடனேறி
சீதையோடுந் தம்பியோடும் திருவயோத்தி வந்தீர்
306 என்று ஈஶ்வரனுர் புகழ்ந்துரைத்த இன்பமான ஸ்துதியை
பிரியத்துடன் கேட்டெல்லோரும் போஜனங்கள் முடித்தார்
307 உத்தரா போஜனம் வாங்க அங்கதன் நீர்வார்த்து
ஆவல்தீரக் கையலம்ப ஆற்றை அழைப்பித்தான்
308 புசித்துமவாள் எழுந்திருந்து பொன்னுசனத்திருக்க
பொற்றளிகை மாற்றியங்கே சுத்திகளும் செய்தாள்
309 தீரமன்னர் மூவருக்கும் சீரான இளையோர்
போஜனங்கள் செய்தவர்க்குப் பொருந்த உபசரித்து
310 பாக்குடனே வெற்றிலையும் பச்சைகற்பூரமும்
தாக்குடனே கொண்டுவந்து சகலருக்கும் கொடுத்தார்
311 தம்பிநின்று உபசரிக்க தாசரதி மூவர்
வந்தமன்னருடன்கூட மணியாசனத் திருந்தார்
312 நின்றிருந்த பாலகனை வந்தமுனி தேவாள்
(அவாள்) கண்களாலே ஆலிங்கனம் களிப்புடனே செய்தார்
313 சொல்லவொண்ணு வடிவுடைய சுமித்திரையாள் மகனை
எல்லவரும் உகந்திருக்க ஸ்ரீராமருங் கண்டுகந்தார்
314 மன்னர்முனி தேவர்களும் மகிழ்ந்திருந்த பின்பு
ஸ்ரீராமா எங்களுட தேசம்போரோ மென்றுர்
315 மன்னர்விடை யளிக்கவுமே வந்தவர்க ளெல்லாம்
கன்றைவிட்டுப் போம்பசுப்போற் கைகாலோய்ந்து சென்றுர்
316 நடந்துமவாள் நகர்புகுந்து ஸ்ரீராமர் கதையை
பலதினமும் மிகவாழ்த்திப் பெருமையுடனிருந்தாள்
317 ஜனகரிங்கே ரகுபதியை தீர்க்கமுடன் வாழ்த்தி
சதானந்தர் தன்னுடனே தவசுபண்ண நடந்தார்.

ஏகாந்தமாய் இருக்கும்போது ஸ்ரீராமர் தான்செய்த பராக்கிரமங்களைச் சீதைக்குச் சொல்லுதல்.

318 மணிவிளக்கு மின்றெரியும் மண்டபத்தினடுவே
மன்னர் ராமர் சீதையுடன் மகிழ்ந்திருக்கும் போது

319 மைதலியாள் தன்னுடைய மதிமுகத்தைப் பார்த்து
மங்களமாம் ராகவரும் வார்த்தைசில உரைப்பார்

320 எந்தனுக்கு மாலையிட என்று சிலகாலம்
புகழ்பெறவே தவஞ்செய்த திருவனையே கேளாய்

321 கௌசிகருடன் கூடிக் கானகத்தில் நடந்து
ரிஷியுடனே பர்ணசாலை இருவருமாய்ப் புகுந்தோம்

322 மாரீசன் வந்தங்கே பாணமழை சொரிய
மன்ன ராமா காருமென்று மகமுனியும் பயந்தார்

323 அஞ்சாதே என்றுசொல்லி ஆதரவாயுடனே
சூரத்துடன் நாணேற்றி பாணங்களைத் தொடுத்தேன்

324 அதிவீர மாரீசனைக் கடலில்விழ வடித்து
அஞ்சாத சுபாகுவையும் சேனையையும் வதைத்தேன்

325 மிதிலைநகர் காணவென்று வனம் நடக்கும்போது
வலியபெருங் கல்லாகி அகலிகையுங் கிடந்தாள்

326 வனந்தனிலே கிடந்தகல்லை மனமிரங்கிப் பார்த்து
(என்) மலரடியால் மிதித்தவுடன் அகலியெழுந் திருந்தாள்

327 மனமார ஸ்துதிக்கலுமே மகரிஷியாரிடத்தில்
அவளைநாங்கள் அனுப்பிவைத்து அவிடம்விட்டு நடந்தோம்

328 மிதிலாபுரியைச் சேர்ந்து மின்னிடையே நாங்கள்
(உங்கள்) அரிதான யாகசாலை வந்தோம் அணியழகி

329 (உன்) தந்தை ஜனகர்கண்டு சந்தோஷத்துடனே
(நீங்கள்) வந்தசேதி யுரையுமென்று மகாமுனியைக் கேட்டார்

330 (உன்) மங்கையரை மணம்புரிய வந்தாரிவரௌன்று
மகமுனிவர் தானுரைக்க மன்னராஜர் மகிழ்ந்து

331 தனுசை ஒடிப்பாரோவென்று சஞ்சலமாயிருக்க
(உங்கள்) அழகீசர் வில்லைஇங்கே அழைப்பியுங்கள் என்றேன்

332 (உன்) ஐயர் அப்போ எவனுமே ஆயிரம்பேர் ஓடி
பெரிதான வில்லையவாள் சபைதனிலே கொணர்ந்தாள்

333 அதிசூரமாய் நாணேற்றி வளைக்கவில்லை எடுத்தேன்
சிதறிஅந்த வில்முறிந்து துண்டுதுண்டாயாச்சு

334 பெரிதான வில்முறித்து என்பேராண்மை காட்டி
பின்னையன்றோ மணம்புரிந்தேன் பொற்கொடியே உன்னை

335 (என்று)அடி நாளில்தான் செய்த ஆண்மை சூரத்தனத்தை
வடிவான சீதையர்க்கு மன்னர் ராமர் உரைத்தார்

336 மைதலியாள் ஜானகியும் மதிப்புடனே கேட்டு
மன்னர் ராமருடன்கூட மகிழ்ந்துமவ ளிருந்தாள்.

சீதாதேவி தன் மனோபீஷ்டத்தை ஸ்ரீராமருக்குச் சொல்லுதல்.

337 ஏகாந்தமாக நித்திரை செய்யும் ஓரிரவில்
மகவீரர் ஜானகியை வனத்தில் விடக்கண்டார்

338 வனத்தில்விடக் கனவுகண்டு மனதுமெத்த உருகி
சடுதியிலே எழுந்திருந்து ஸ்நானமது செய்து

339 மறையோர்க் கனேகங்கோடி மகதானங்கள் கொடுத்து
ஒருவருக்கும் விஷயந்தன்னை உரையாமலே யிருந்தார்

340 ஏகாந்தமாய் சீதையுடன் இருக்குமொரு நாளில்
மைதலியைக் கிட்டழைத்து மடியில்வைத்துக் கொண்டு

341 வாகுபுஜத்தை யணைந்து மதிமுகத்தை முகர்ந்து
ஏதுனக்குஆசை சீதாஎன்று ராமர் கேட்டார்

342 ராகவரும் கேட்கனுமே பார்மகளும் மகிழ்ந்து
நாயகனார்முகம் நோக்கி நயந்துமவளுரைப்பள்

343 ஆசையொன்றும் குறைகள்வைத்து ஆண்டீரோ ராமா
வேணவேண பாக்கியங்கள் மிஞ்ச மிஞ்ச அனுபவித்தேன்

344 ஆனாலுமே ஓராசை அண்டியும்மைக் கேட்பேன்
கானகத்தில் அருந்ததிமாரைக் காணவேணு மென்றாள்

345 காணவேணு மென்கனுமே கலங்கிமெத்த சலித்து
போகவிடுவோ மென்று பூமகளுக் குரைத்தார்.

வண்ணான் சொலலிய அபவாதம்.

346 மாருதியைச் சாரணனை மன்னர் ராமர் பார்த்து
(இந்த) உலகவசனங்கள் தன்னை அறிந்து வாருமென்றார்

347 மாருதியுஞ் சாரணனும் மாநகரந் திரிந்து
நாடுபூமி நகரமெங்கும் நல்வசனங் கேட்டான்

348 ராமருட கீர்த்திகளை நாட்டிலெங்கும் கேட்டான்
ஸ்ரீராமர் கீர்த்திதன்னை திக்கிலெங்கும் கேட்டான்

349 மீண்டுமங்கே வரும்போது வண்ணானொரு பாவி
விழுப்புரிவோன் தன்தாரத்தை வெடுவெடுத்துச் சொல்வன்

350 கடுகெனவே விழியுருட்டிக் கடுமையுடன் பார்த்து
காதினாலே கேட்கவொண்ணாக் கடுவசனம் உரைப்பன்
351 அரக்கன் கொண்ட மைதலியை அறிவுகெட்டராமன்
இனத்துடனே சேர்த்தாப்போல் என்னை எண்ணினாயோ
352 மதத்துடனே ஐந்திரவு அன்னியர்மனை வசித்தாய்
வஞ்சகிநீ வேண்டாமென்று வெறுத்துமவ னுரைத்தான்
353 மதிகேடன் பாவிசொன்ன வார்த்தைதன்னைக் கேட்டு
மாருதியும் தூதர்களும் மனஸுமெத்த நடுங்கி
354 தாசரதி ராகவனார் சமுகந்தனில் வந்து
கிலேசத்துடனே பணிந்து கைகாலோய்ந்து நின்றார்
355 அருகில்வந்த தூதுவரை அபிராமர் பார்த்து
ஒருவிஷய மொளியாமல் உரைக்கவேணு மென்றார்
356 சாரணாரு மதுகேட்டுத் தாங்கள் மெத்தபயந்து
நாடுநகரங்க ளெல்லாம் நல்வசனங் கேட்டோம்
357 ஸ்ரீராமர் கீர்த்திதன்னைத் திக்கெங்குங் கேட்டு
திரும்பி நாங்கள் வரும்போது தீயனொரு வண்ணான்
358 (அவன்) ஆகாத வார்த்தைகளை அஞ்சியவா னுரைக்க
(அந்த) ஸாகஸ விஷயந்தன்னை தாசரதி கேட்டு
359 ஜானகியை மிகவெறுத்துச் சலித்து மனந்தவித்து
மாநகரின் அவமதிப்பை வைதேகி தன்னை
360 நினைத்துருகி ராகவரும் தம்பிமாரை யழைத்து
(இந்த) வணக்கமுள்ள மைதலியை வனத்தில் விடுமென்றார்
361 தம்பியர்க ளிதுகேட்டுத் தவித்து மனமுருகி
என்ன அபசாரஞ் செய்தாள் மைலியாளுமக்கு
362 உலகவாக்கியம் நாலுமுண்டு எண்ணலாமோ ராமா
மதனகோபாலா உமக்குக் குறைவருமோ ஐயா
363 நம்மதந்தையருந் தேவர்களும் வந்துமுன்னே சொன்ன
மங்களமாம் வாக்கியங்கள் மறந்தீரோ ஐயா
364 தணல்வளர்த்துத் தெளிவுதந்த ஜானகியாள் மகிமை
அறியோமோ என்றிளங்கோ அண்ணரடிபணிந்தார் [வென்று
365 (அந்த) வண்ணானென்ற பாவிசொல்லை எண்ணுவாளோ
(ராமர்) பங்கஜமா மிருதாளைப் பரதர்பற்றிப் பணிந்தார்
366 பரதர்பற்றிப் பணியவுமே இளங்கோவுங் கிளையோர்
மஹானுபாவர் முகநோக்கி மனதுநொந்து உரைப்பர்

367 (அந்த) பழுதுசொன்ன பாஷாண்டியைப்பற்றி இங்கே
உயிர் துடிக்கக் கொல்லுவது உச்சிதமே ஐயா [இழுத்து
368 ஆயுதமுங் கையிருக்க (என்) தாயைச் சொல்லக்கேட்டும்
அலகெடுத்தென் அங்கந்தன்னை அறுத்தெரியவேணும்
369 (என்று) விறுவிறுத்துச் சத்துருக்கனர் விசனத்துடன் கூட
அருவிவிழ இருகண்ணிலும் அபிராமரைப் பணிந்தார்

ஸ்ரீராமர் வைதேகியை வனத்தில்விட லக்ஷ்மணரை ஏவுதல்

370 இருபேரும் போனபின்பு இளையோரைப் பார்த்து
அபிராமர் கூறிடுவர் ஒரு அறக்கொடிய வார்த்தை
371 (தம்பி) சமு தாடுதனை எடுத்தென் தேகம் விழப்பிளந்து
பிராண ஹானிபண்ணிக்கவோ மாதை விட்டுவரயோ
372 கொடுநாகம் போலே ராமர் கோபமிகமண்டி
(என்) உயிரான ஜானகியை ஓட்டுமென்றார் வனத்தில்
373 இளையோரு மதுகேட்டு எண்ணி மனம் நொந்து
தாசரதி ராமருட தாளிணையிற் பணிந்து
374 (அந்த) வணக்கமுள்ள மைதலியை மாபாவி அடியேன்
வனத்தில்விட்டு வரும்போது என்னசொல்லி வருவேன்
375 என்ற தம்பிமுகம்நோக்கி ரகுராம ரப்போ
இனியொருக்கால் வனங்காண வேண்டுமென்றாள் மாது
376 அந்த அடையாளஞ்சொல்லி ஆரணங்கை யழைத்து
அடவிதனில் விட்டுவா என் ஆனதம்பி என்றார்
377 (மிக)நொந்து வெகுவாய்ச்சலித்து வெறுத்து இளங்கோவும்
சர்வேஸ்வரி சீதை பக்கந் தானும்வந்து பணிந்தார்
378 தாயாரே கேளுமம்மா தாசரதி தேவி
சந்ததமும் உந்தனுடன் எந்தன் விதியம்மா
379 இனியொருக்கால் வனங்காண வேண்டு மென்றீராம்
வனத்திலுள்ள அருந்ததிமார் தங்கள்பாதம் பணிந்து
380 ஆடையுடன் ஆபரணம் அளிக்கவிரும்பினீராம்
ஆதிரகுநாத ரும்மை அழைத்துப் போகச்சொன்னார்.

ஜானகிதேவி ஸ்ரீராமரிடம் விடைபெற்று வனம் ஏகுதல்

381 சீதாதேவியுங் கேட்டுச் சிந்தைமெத்த மகிழ்ந்து
கௌஸலையின் மனைபுகுந்து களிப்புடனே உரைப்பள்
382 இனியொருக்கால் வனங்களுக்குப் போய்நானும் வருவேன்
விடைதாரும் அம்மாவென்று மிதிலைவாழ்வு பணிந்தாள்

383 அந்திப் பொழுதினிலே அனல்வீசுங் காட்டில்
மத்தியானப் போதினிலே புலியுறுமுங் காட்டில்
384 பொடிவீசுங் கானலிலே போனநாள் போராதோ
வனம்நடப்ப துந்தனக்கு வாடிக்கை யோமகளே
385 வனத்திலுள்ள அருந்ததிமார் அம்பொன்பாதம் பணிந்து
திரும்பிநான் வருவேனென்று சீதையரும் பணிந்தாள்
386 என்றுசொல்லி ஜானகியும் இந்து போலே நடந்து
அபிராமர் தாளடியில் அகிலமாதா பணிந்தாள்
387 அடிபணிந்த ஜானகியைப் பார்த்து ரகுராமர்
பொறிசிதற இருகண்ணிலும் போய்வா வென்றுரைத்தார்
388 (சீதா) பின்னிவிட்ட புரிக்குழலும் பீதாம்பரத் தொளியும்
பீதாம்பரந் துவளும் அந்தப்பின்னழகுங் கண்டு
389 மன்னர்ராமர் கண்டயர்ந்து மணிமகுடங் குலுக்கி
சொந்தமுள்ள ஜனகராஜர் தந்தவடி வெல்லாம்
390 இந்தவிதி யாச்சுதென்று எண்ணியுள்ளம் நொந்து
என்ன செய்வேனென்று மனதேங்கி மிகவழுதார்
391 அரிதான வில்லைக்கொண்டு பிறந்தமைதலிக்கு
துக்கமே தானொழிய சுகமொரு நாளுமில்லை
392 கலப்பையுழும் பூமியிலே பிறந்த மைதலியும்
கஷ்டமே அடைந்தாளென்று கலங்கிமிக அழுதார்
393 சுமந்திரரும் இளையகோவும் சடுதியாக ரதத்தை
ஜானகியாள் பக்கலிலே தானுமவாள் கொணர்ந்தாள்
394 சுமந்திரரும் இளையவருஞ் சேர்ந்துமவாள் கூடி
தார்குழலாள் ஜானகியைத் தளராமலே ஏற்றி
395 இருபேருமாக அந்த இரதத்தை மெல்லத்திருப்பி
அரிமுறையோர் தீர்த்தமாடும் நதிக்கரையில் வந்தாள்
396 வந்துகுகன் ஓடம்விடக் கங்காநதி தாண்டி
அந்தமான வனங்களெல்லாம் மெள்ளமெள்ளக் கடந்து
397 தஞ்சமான வால்மீகர் தவ்வனத்தில் வந்து
தவித்துமந்த இளையோரும் சுமந்திரரைப் பார்த்து
398 என்னசொல்லி நில்லுமென்பேன் என்தாயை என்று
அன்பான இளையோரும் அலத்தியே விழுந்தார்
399 தவித்தலறி விழுந்தவரை ஜனகர்மகள் கண்டு
தனக்குவரும் விதிவசத்தை தானுமறியாமல்

400 தவியாதே இளையவரே மனந்தவிக்கா தேயும்
(உம்ம) தமையனாரை நாளைத்தானே காணப்போவோ
401 சுமந்திரனுங் கேட்டுமதைத்துக்கமிக மண்டி [மென்றாள்
ஜனகர்மகள் முகநோக்கி மனதுநொந்து உரைப்பர்
402 அகிலபுவனம் பயன்பெறுந்தா அறமணமே தாயே
அரக்கன் கொண்டுபோன அப வாதத்தினால் ராமர்
403 அடவிதனில் விட்டுவரச் சொன்னா ரிளங்கோவை
மாதாவே சொல்ல அஞ்சி மனந்தளர்ந்தா ரிளையோர்
404 (அதைச்) சீதாதேவி கேட்டுச் செவியிரண்டும் பொத்தி
ஸ்ரீராமா வென்றலறிப் பூமியிலே விழுந்தாள்.

சீதாதேவி வனத்தில் பிரலாபித்தல்.

405 வேதாவின் கற்பனையோ என்று மாதா வெறுத்து
மீண்டுமவள் சொல்லிடுவள் மிதிலை ராஜகுமாரி
406 (எனை)யாண்ட அபிராமருக்கு அபசார மொருநாள்
அடியேன்பிழை செய்ததில்லை என்ஐந்து பூதமறிய
407 மாதா வரங்கேட்டு வனவாஸம் பண்ணும்போது
மாபாவி மாரீசன் பொன்மானாகி வரவே
408 (என்) ஆகாத காலத்தினால் மான்வேணு மென்றேன்
மானின்பின்னே நடந்துசென்றார் மஹானுபாவ ராமர்
409 அம்புபட எய்யவுமே அதிபாவி மாரீசன்
ஆ சீதா லக்ஷ்மணா என்றலறி விழுந்தான்
410 அண்ணர்ராமர் புலம்புகின்றார் அடவியிலே என்றேன்
மன்னரபிராமருக்கு வராது பயமென்றீர்
411 மதியுரைத்த இளங்கோஉம்மை மஹாகொடிய வார்த்தை
(என்) வாயினாலே சொல்லிவிட்டேன் வருவதறியாதே
412 சுகிர்தாவே உம்மைச்சொன்ன தோஷ உதாசீனம்
(இப்போ) அபசார மாகவந்து வாய்த்த திளங்கோவே
413 அதல்லாமல் இளையவரே உங்களபிராமர் தமக்கு
என்னபிழை செய்தேனிப்போ என்னைக் காட்டிலோட்ட
414 சீருடைய மிதிலையிலே செல்வமாக வளர்ந்து
ஸ்ரீராமரைமாலையிட்டுச் செழித்திருக்கும்போது
415 மறையோர்கள் அந்தணர்கள் பெரியோர்களெல்லாம்
நீ பெருவாழ்வு வாழ்வையென்று வாழ்த்தினது பொய்யோ

416 அபிராம ருடன்கூடி அயோத்தி நகர்தனிலே
அன்புடனே வாழ்ந்ததுவுஞ் சிலகாலமோ விதியே
417 (என்று) பங்கயக்கண்ணீர் தளம்பிக் கொங்கையின் மேல்விழ
மணிப்பவழ வாய்திரந்து புலம்பிநின்றாள் ஜனகி
418 கண்டுமந்த இளையவருங் கண்கண்ணீர் கொள்ளாதே
கதறியே மிகவலறி ஜனகியுடன் சொல்வர்
419 என்தாயே ரகுபதிக்கு உன்சோகஞ் சொல்லி
தங்காதே உம்மையழைக்க வருவேனம்மா தாயே
420 மங்காதேயும் வால்மீகர் ஆசிரமம் இங்கே
தங்காதே போயிருமென்று ஜானகியைத் தொழுதார்
421 தொழுது இளங்கோவும் போக விடை தாருமென்க
பரமகலி யாணியரும் விடைகொடுத்து நின்றாள்
422 சுமந்திரரும் இளையவரும் இருவருமாய்க் கூடி
திரும்பிச் செம்பொன்தேரேறி திசைநோக்கி நடந்தார்
423 தேர்மகுடம் மறையுமட்டும் நின்றிருந்த சீதா
(தேர்) தூளியது மறைந்தஉடன் சோகமதை யடைந்தாள்
424 புலம்பியே மிகவழுது பொற்கொடியுங் கலங்கி
பூமியிலே இக்கதையைக் கேட்டு மறியேனே
425 பெரியோரைப் பழித்தேனோ பெரும்பாவங்கள் செய்தேனோ
பிரியாத ஆணும்பெண்ணும் பிரியவடித்தேனோ
426 கூலி குறைத்தேனோ குறைமரக்கால் அளந்தேனோ
அங்காடி வித்தவரை அதிர வடித்தேனோ
427 சந்திக் கிணற்றினிலே தலைநீர் கொண்டேனோ
தாயில்லாப் பிள்ளைதனைத் தலையி லடித்தேனோ
428 ஆடிவரும் பாம்புதனை அரையி லடித்தேனோ
கூடிவரும் ரிஷபந்தன்னைக் கோலால் கலைத்தேனோ
429 பட்டறையின் நெல்லினிலே பதரைக் கலந்தேனோ
பட்டப்பக லிலேசாணந் தெளிக்க வைத்தேனோ
430 அன்னதானம் தவிர்த்தேனோ ஆடும்பாம்பைக் கொன்றேனோ
என்னபாவம் செய்தேனோ என்னைக்காட்டிலோட்ட
431 பண்டுசெய்த பாவந்தானோ பலரைப் பழித்தேனோ
எதனாலே தனியானேன் என் அபிராமா வென்றழுதாள்
432 குஞ்சரத்தை மடுதன்னிலே நின்று பயந்தீர்த்தீர்
அம்பலத்தே திரௌபதியின் அவமானங் காத்தீர்

433 அன்புள்ள சபரியர்க்கு மோக்ஷமது கொடுத்தீர்
அபிராமா என்புருஷா அகலிசாபந் தீர்த்தீர்
434 அறியாத இளவயதில் அடியாளை மணந்தீர்
(என்று) வடிவான குழல்புரள மாதா சோகமடைந்தாள்
435 மாதாசோக மடையலுமே வனத்திலுள்ள மயில்கள்
சூரியனைக்கா ணொட்டாதே தோகையினால் மறைத்து
436 பாகீரதி நீர்கொணர்ந்து சீதைமேலே தெளித்துத்
தோகையினாலே விசிறிச் சோகித்தது மயில்கள்
437 மயில்கள் களையாற்றலுமே மாதாவுந் தெளிந்து
பொழுது விழலரச்சேனென்று பொற்கொடியு மழுதாள்
438 சூந்தளப் பொன்னால்வேய்ந்த ஜனகர் அரண்மனையில்
நான் கூடிவிளையாடிநின்ற தோழிமார்கள் கண்டால்
439 அந்தர வனத்தில்சீதை அலத்துகிறாள் என்று
அதைக்கேட்டால் எங்களய்யர் அலமெடுத்துப் பாய்வார்
440 அந்தரங்கத் தோழிமாரை அயோத்திநகர் வாழ்வை
அருமைக்கிடும் மாமியரை ஆரணங்கு நினைத்து
441 செந்தணலிலே விழுந்த மெழுகது போலுருகி
சிறியொரு வார்த்தை சொல்வள் ஜனகரின் குமாரி
442 கடலடைத்துச் சிறைமீட்ட கவலை மறந்தாரோ
ஐயத்துடனயோத்திவந்த சிநேகம் மறந்தாரோ
443 இருபேரும் ஒருமனதாய் இருந்த தறியாரோ
என்னைக் காட்டிலோட்டிவிட ஹேதுவறியேனே
444 மண்டுங் கண்ணீர்தளம்பி கொங்கையின் மேல்விழவே
கிளிப்பவழ வாய்திறந்து புலம்பிகின்றாள் ஜனகி.

ஜானகிதேவியைத்தேற்றி வால்மீகிரிஷி தன் ஆசிரமத்துக்கு அழைத்துப்போதல்.

445 வால்மீகர் அநேகங்கோடி சிஷ்யாளுடன் கூட
சிறுதர்ப்பை சமித்தெடுத்துத் திசைநோக்கி நடந்தார்
446 குயில்போலுங் குரலுடையாள் கோவென்றழும் சப்தம்
தவமுனிவர் வால்மீகி தன்செவியில் விழவே
447 ஸர்வேசுவரி வனத்தில் தளம்புகிறாளென்று
சடுதியிலே மகமுனியும் ஜானகியிடம் வந்தார்
448 (இந்த) அபவாதம் ஏனம்மா அறமணமே உமக்கு
தவியாதேயும் எந்தனுட கிரகந்தனிலே வாரும்

449 (உம்) தந்தை ஜனகரைப்போல் எந்தனையுமெண்ணி
தரயாரே வாருமம்மா (என்) பாவமெல்லாம் போக
450 வால்மீகர் உரைக்கனுமே (சீதை) மனஸ்தாபமாறி
மகமுனிவர் கிரகந்தனக்கு வைதேகி நடந்தாள்
451 வனத்திலுள்ள அருந்ததிமார் மைதலியை வாழ்த்தி
அருமையுடன் ஹாரத்திக் காப்புமவா ளெடுத்தாள்
452 அழகாசனம் போட்டு அருந்ததிமா ரிருக்க
அபிராமர் தேவியரும் அமர்ந்துமங்கே இருந்தாள்
453 வால்மீகர் ஆசிரமத்தில் வைதேகி யிருக்க
வழிநடந்து இளையவரும் சுமந்திரனோ டுரைப்பர்
454 ரகுநாதர் மலர்முகத்தை எப்படிநான் காண்பேன்
(என்று) அலத்திவந்து இளையவரும் அண்ணரடி பணிந்தார்
455 அடிபணிந்த தம்பியரை அபிராமர் பார்த்து
(என்) இந்துமதி வாழ்முகத்தாள் எங்கே இளங்கோவே
456 விம்மியே அழுதுகொண்டு விசனத்துடன் கூட
அந்தரமான வனந்தனிலே விட்டுவந்தே னென்றார்
457 விட்டுவந்தே னென்கனுமே விராசனத் திலிருந்து
(என்) பொற்கொடியே சீதாவென்று பூமியிலே விழுந்தார்
458 தளர்ந்துமங்கே விழுந்தவரை தம்பிமார்களெடுத்து
கனகாஸனந் தனிலே ரகுபதியை அமர்த்தி
459 உடனாஸன மிருந்து உற்ற தம்பிமார்கள்
பரிதாபமே யடைந்து அவரவர்கள் அழுதாள்
460 காசிபரும் கௌசிகரும் ஜாபாலிமுதலோர்
அபிராம புருஷோத்தம அகலிசாபந் தீர்த்தீர்
461 ஹரிநீரே ஹரன்நீரே அண்டர்பதி நீரே
வடபத்ர சாயிநீரே மஹாபுருஷர் நீரே
462 மனுஷரைப்போல் பரிதபிக்க வேண்டாமய்யா ராமா
வைகுண்ட வாஸியேநீர் மனக்கவலை தீரும்
463 மன்னவரே அபிராமா மனஸ்தாபம் விடுமய்யா
மாதுமந்த மைதலியாள் (உம்ம) வசமடையப் போறாள்
464 மகரிஷிகள் தான்கூடி ராகவரைத் தேற்ற
பரிதாபமும் அடங்கி அபிராமர் இருந்தார்.

குசலவாள் அவதாரம் செய்தல்

(சற்குருவின் பாதத்தையே சந்ததமும் நினைத்து என்ற கும்மிமெட்டில் 485-வரையில் பாடலாம்.)

465 வால்மீகர் ஆசிரமத்தில் இருந்த மைதிலிக்கு
மைந்தர்களைப் பயன்றெடுக்க வந்ததப்போ மாஸம்
466 பொன்மேனி மிகவாடப் பெருங்கயற்கண் சுயள
கஞ்சமுகம் வேர்த்தரும்பக் கமலவிழி சிவக்க
467 சுந்தரமாம் இடைதனிலே சொர்ணஆடைதுவள
தர்மரிஷிப் பெண்களிடம் தங்கித்தங்கி நொந்தாள்
468 நொந்தமாதைப் பத்தினிமா ரெடுத்தணைத்துக் கொண்டு
கைவிசிறியால் விசிறிக் களைநோவு தீர்த்தாள்
469 இந்தநோவு இனிக்கணக்கா யிரண்டுநாழி நொந்தால்
சந்தேகமு மில்லையம்மா எந்தனுவி போகும்
470 (என்னை) ஆண்ட அபிராமருக்கும் தந்தை ஜனகருக்கும்
என்நிமித்தம் செய்கின்றதோ ஏதுமறியேனே
471 என்றுமாதா தானுரைக்க ரிஷிபத்தினி மார்கள்
அன்னநடை சீதையுடன் அன்பாக உரைப்பாள்
472 அந்திப்பொழுதினிலே அனல்வீசுங் காட்டில்
மத்தியான வேளையிலே புலியுறுமுங் காட்டில்
473 சிறுநெரிஞ்சில் முள்ளான தீயான வனத்தில்
நிறுத்திவிட்டுப் போனவரை நினைத்தழ வேணுமோ
474 சீதையரு மதுகேட்டுச் சிந்தைமிக வருந்தி
என்தலையின் விதியம்மா இதுவுமொத்தர் செயலோ
475 எனையாளும் ரகுபதியை ஏகதார விரதரை
கௌசலையாள் திருவயிற்றில் அவதரித்த மணியை
476 தசரதனுர் பெற்றெடுத்த தலைமையாம் ராஜாவை
(நீங்கள்) என்ன இப்போ சொன்னாலும் ஏர்க்குந்தரமானேன்
477 அறமங்கையுங் கொதிக்கலுமே அருந்ததிமார் பயந்து
திருவேபிழை செய்தோமென்று தேவியரை அணைத்தாள்
478 சூழ்ந்திருந்த அருந்ததிமார் சுந்தரியைத் தேற்ற
சோதிவிடுங் கதிரொளிபோல் (இரண்டு) சூரர் அவதரித்தார்

479 அவதரித்த வல்லவானே அருந்ததிமா ரெடுத்து [பாள்
வண்ணரென்பாள் விண்ணரென்பாள் வடிவுடையோ ரென்
480 காளமேகர் மைந்தரென்பாள் காகுஸ்தரோ என்பாள்
கதிர்குலத்தை ஈடேற்றும் கட்டழகர் என்பாள்
481 ஒருவருக்கும் உவமையிடப் போகாதிவாள் வடிவை
(என்று) உகந்துபேசி அருந்ததிமார் மனமகிழ்ந்து பார்த்து
482 மயிலனைய மைந்தருக்கு மஞ்சள்நீ ராட்டி
துயில்பட்டாலே துடைத்து செவ்வெண்ணெயு மிட்டாள்
483 மைதலியாள் பாலகரை மடிதனிலே கொண்டு
வலமுலையைத் தான்கொடுத்து வளரவே விட்டாள்
484 வால்மீக ரதுகேட்டு மனதுமெத்த மகிழ்ந்து
நாட்களோடு நக்ஷத்திரம் நல்லதென்றே கண்டார்.

பாலர் இருவருக்கும் காப்பிடுதல்.

485 இளங்கொடியாள் சீதையர்க்கு ஏழுநாளாக
காகுஸ்தனார் மைந்தருக்குக் காப்பிடண மென்று
486 செம்புடனே இரும்பும் சேர்ந்தவெள்ளிக் காப்பும்
நவரத்தினங்களிழைத்த நல்லதங்கக் காப்பும்
487 அபிராமர் மைந்தருக்கு அழகுதங்கக் காரை
அறமுனிவர் வால்மீகி செய்துவந்து கொடுத்தார்
488 பவழம்போலே பச்சரிசி பதிங்கலத்தை எடுத்து
கொத்துக்கொத்தாய் பாகுசேர்த்து கோலங்களு மிட்டு
489 சிறுசெம்பொன் உரல்பதித்து சங்குதாழை வைத்து
பூர்ணகும்பங் கொண்டுவந்து பொற்கொடிமார் வைத்தார்
490 அங்கேஒரு பதிவிரதை அழகாக எழுந்து
சங்குபோ லிடித்ததொரு சதுரப்பொடி தொட்டு
491 மாணிக்கப்பொன் குழவிதனை மஞ்சனநீ ராட்டி
கொடியிற்பட்டைத் தான்போட்டு குழவிதன்னை விட்டாள்
492 பத்தினிமா ரெல்லாரும் பொற்கதவைச் சாற்றி [கேட்டாள்
(உம்ம) பர்த்தாவின்பேர் சொல்லுமென்று பொற்கொடிமார்
493 இளவரிஷி என்கணவர் என்றுமவ ளுரைக்க
இளங்கொடிமா ரெல்லாருங் கேட்டுமிகச் சிரித்தாள்
494 தட்டினுள்ள தாம்பூலம் சகலருக்கும் கொடுத்து
கட்டிப்பருப்பு காப்பரிசி கையிலள்ளிக் கொடுத்தாள்

495 பாலகரைப் பயின்றெடுத்த பதினோராம் நாளதனில்
மைதலியாள் பாலகர்க்கு மஞ்சனநீ ராட்டி
496 செம்பொன் மணிக் கிண்ணியிலே எண்ணெய்தனை எடுத்து
சிகைக்காய் நெல்லியுடனே சிறுபயறு மரைத்து
497 அரசியற்கு நீராட்டி அழகுமயிர் கோதி
முத்தணிந்த வாழ்முகத்தில் குளிமஞ்சளும் பூசி
498 பட்டை அழகாய் உடுத்தி பாவைமயி ராற்றி
உச்சிதமா மண்டபத்தில் உத்தமியைக் கொணர்ந்தாள்
499 மாதளம்பூப் பட்டுடுத்தி வகைபணதி பூட்டி
(ராமர்) காதலியாள் ஜானகியும் கண்மறைவா யிருந்தாள்
500 சுக்குவெல்லமுங் கொடுத்து சுந்தரியாள் தனக்கு
ஆரணங்கு சீதையர்க்கு அடைக்காயுங் கொடுத்தாள்
501 அரைவடமுங் கிண்கிணியும் பொன்னா லரைஞாணும்
அபிராமர் மைந்தருக்கு அன்புடனே சாத்தி
502 வண்ணமணித் தொட்டிலிட்டு வாழுங் குசலவர்க்கு
காகுஸ்தனார் மைந்தர்களை கண்வளர விட்டாள்
503 புகழ்வீர ராய்விடுவாள் புவனமுழு தாள்வார்
தரணியெல்லாஞ் ஜயிப்பா ரென்று தாராட்டினார்கள்
504 சாதகமுந் தானெழுதி வாழுங் குசலவர்க்கு
நாமகர்மஞ் செய்யலுமே நலம்பெறவே வளர்ந்தாள்
505 ஐந்துவய தானவுடன் அக்ஷரமும் பயின்று
தஞ்சமுள்ள முனிவரிடம் சகலவித்தை படித்தாள்
506 விருப்பமுடன் வில்வித்தையுஞ் சிலம்பங்களும் பழகி
குறிப்புடைய ரகுநாதர் குமாரரிங்கே வளர்ந்தாள்

அயோத்தியில் ஸ்ரீராமர் அச்வமேத யாகஞ்செய்ய ஆரம்பித்தல்.

507 பதினாலு உலகமாளும் ரகுநாத ரங்கே
அரிதான அச்வமேத யாகஞ்செய்ய எண்ணி
508 தம்பி சத்துருக்கனரைத் தாசரதி அழைத்து
அறமுனிவர் வசிஷ்டர்தன்னை அழையுமென்று சொன்னார்
509 அச்வமேத யாகமென்று ஓலையிலேயெழுதி
அரசர்முதல் தேவர்கட்கும் அனுப்புமென்று சொன்னார்
510 விண்ணுலகம் மண்ணுலகம் வேதாவின் உலகம்
எண்ணுமுலகம் பதினாலுக்கும் எழுதிவிட்டார் பரதர்

511 அந்தமான அயோத்திதன்னை அழகுபெற அமைத்து
இந்திரநீலக் கல்லாலும் சொர்ணத்தாலும் வேய்ந்து
512 சந்திரகாந்தக் கல்லாலே தளவரிசை போட்டு
(ராமர்) மந்திரகர்மம் செய்வதற்கு மண்டபங்களமைத்தாள்
513 மேற்கட்டுகள் கட்டி நல்லவி நெடுங்கள் சொரிந்து
தோரணங்கள் கட்டியவாள் தொடுத்தபூக்கள் கட்டி
514 மல்லிகையும் செண்பகமும் வாய்த்த வெட்டிவேரும்
வகைவகையாய் இருவாக்ஷி மலர்களெல்லாந் தொடுத்து
515 பந்தலெங்கும் தொங்கவிட்டுப் பரிமளங்கள் வீச
சந்தனத்தால் தரைமெழுகி கோலங்களு மிட்டாள்
516 அடர்ந்துவந்த முனிவர்களும் அபிராமரைப் பார்த்து
(ஐயா) துலங்குஞ் சீதையில்லாதே யாகமில்லை என்றுள்
517 அந்தமுள்ள விச்வகர்மா அழகுசொர்ணத்தாலே
வந்துமங்கே மைதலிபோல் மாத்திரையில் சமைத்தான்
518 மங்களமாஞ் சீதையுருக்கண்டு ராமர் மகிழ்ந்து
விந்தையுடன் வெகுமதிகள் விச்வகர்மாவுக் களித்தார்
519 மகரிஷிகள் முனிவர்களும் வந்து யக்யசாலை
பஞ்சதசக் கடந்தனிலே கும்பமது வைத்து
520 வந்தமுனி தேவாளும் மந்திர ஜபம்பண்ணி
அந்தமுள்ள ராமருக்கு அபிஷேகஞ் செய்தாள்
521 கேரலமணிக் கோலவளை பட்டாடை களைந்து
கலையினுட தோளுடுத்தி காகுஸ்தரு மிருந்தார்
522 ரகுநாதர் வேள்விகாணக் கைலாஸ வாஸி
உமையுடனே ரிஷபமேறிப் பலவாத்தியங்கள் முழங்க
523 அஷ்டவஸுக்கள் கந்தர்வர்கள் அமரர்களுஞ் சூழ
அயனுடனே நீலகண்டர் அயோத்திவந்து சேர்ந்தார்
524 தீக்ஷா குருநாதருட வேள்விகாண வென்றே
இந்திரனிந்தி ராணியுடன் வெள்ளையானை யேறி
525 முகவீணை நாகஸ்வரம் முன்னே நின்றுஊத
முப்பத்து முக்கோடி தேவாள் சுற்றிநின்றுபோற்ற
526 அதிரவெகு முழக்கத்துடன் அயோத்தி நகர்வந்து
எதிரொருவ ரில்லாத ரகுபதியைப் பணிந்தார்
527 அனுமாருடன் ஜாம்பவரும் ராஜ சுக்கிரீவரும்
தாரைநீலன் அங்கதனும் சகல வானராளும்

528 வானராள் சேனைகளும் மறுகடல் போல்வந்து
அன்புடைய ரகுநாதர் அடிமலரைப் பணிந்தாள்
529 விபீஷணருஞ் சரமையுடன் திரிசடையுங் கூட
ராக்ஷதச் சேனைசூழ ரதந்தனிலே ஏறி
530 தேர்களெங்கும் அதிர்ந்துவரத் தூள்கள்எங்கும் பறக்க
வேகமுடன் அயோத்திவந்து வில்லாளியைப் பணிந்தாள்.

அச்வமேதக் குதிரை விடுதல்.

531 மன்னவர்கள் முதலானோர் வந்து சபைநிறைய
பர்ணசாலை தன்னைநல்ல பளிங்குபோலத் துலக்கி
532 ஆகம சாஸ்திரப்படி யாககுண்டம் அமைத்து
வாழும்ரகு நாதரப்போ மணித்தேங்காய் உடைத்து
533 யாகசாலை தன்னில்சில வேதியர்கள் சேர்ந்து
காராவின் நெய்சொரிந்து காகஹோமம் பண்ணி
534 மகமுனிவர் கூடிநல்ல மந்திரங்களாலே
ஆகுதிகள் பண்ணிநல்ல அச்வந்தன்னை விட்டாள்
535 சிலைவீரர் மூவருக்கும் சிறுவரான இளையோர்
அநேகங்கோடி சேனைசூழ அச்வத்துடன் போனார்
536 அக்கினியின் முன்பாக ஸ்ரீராமர் இருந்து
அன்புடைய தம்பியரைப் பார்த்துமவ ருரைப்பார்
537 அடர்ந்துவந்த முனிவருக்கும் ஆனமறையோர்க்கும்
அன்புடனே எல்லவர்க்கும் அமுதளியு மென்றார்
538 ராஜான்னம் சம்பான்னம் நலம்பெறவே சமைத்து
காய்கறி வகைதனிலே அநேகமது திருத்தி
539 பாகமான பருப்பமுதும் தாளதமுஞ் சமைத்து
போனகமும் பொறிக்கறியும் போர அவாள் சமைத்தாள்
540 அறமுனிவர் முதலோரை அடங்கலுமே அழைத்து
சகலவர்க்கும் நெருங்காது சதுராய்பந்தி வைத்தாள்
541 அழகாக இலைபோட்டு அம்ருதநீர் தெளித்து
பரிவாக அங்கதனும் பாத்திரசுத்தி பண்ணினான்
542 கடுகுமாங்காய் உப்புஇஞ்சி பச்சடியும் வைத்து
ஆமவடை போளியுடன் பால்பாயஸம் போட்டாள்
543 அழகான தொன்னையிலே ஆஜ்ஜியமும் வார்த்து
அத்தனைபேர் மன்னவர்க்கும் அன்னம் பரிமாறி

544 அப்பமுடன் அதிரஸமும் சுகியன் தேன் குழலும்
முப்பழமும் திருத்தியவாள் முடியளங்கும் போட்டாள்

545 நாவு உணராதிருக்க நல்லகங்கா தீர்த்தம்
ஜாம்பவனும் கொண்டுவந்து சகலருக்கும் கொடுத்தார்

546 காய்ச்சின பால்விடுதயிரு கட்டுமுட்டா யெடுத்து
பந்திக்கெல்லாம் பறிமாறினுள் மந்திரிமார் கொணர்ந்து

547 உத்திர ஆபோஜனம் வாங்கியவாள் எழுந்து
ஆவல்கெடக் கையலம்பி ஆசமன்யம் பண்ணி

548 போஜனங்கள் செய்தபின்பு பொன்னுஸனத் திருக்க
தாம்பூலங் கந்தபுஷ்பம் சகலருக்கும் கொடுத்தாள்

549 கௌஸலேயும் சுமித்திரையும் காக்ஷிகளைக் கண்டு
கமலமுக ஜானகியை நினைத்துமிக அழுதாள்

550 வசிஷ்டருடன் அருந்ததியும் அருகினிலே வந்து
தவியாதே கௌஸலாதீர் மனந்தவியாதேயும்

551 (உம்ம) மைந்தர்பெத்த பாலகரை மடியில்வைக்கப் போரீர்
(என்று) வாழ்த்தியே வசிஷ்டமுனி தேற்றியே இருந்தார்

552 அன்புடைய ராமரிங்கே யாகந்தன்னை நடத்த
இன்பமுள்ள சீதையரும் இருந்த வனந்தனிலே

553 கண்மணியாம் பாலகரின் கமலமுகம் பார்த்து
அன்புடைய மாதாவும் அகமகிழ்ந்தே இருந்தாள்.

வால்மீகர் ஆசிரமத்தில்
சீதாதேவி பாலகருடன் சம்பாஷித்தல்.
சீதாதேவிக்குப் பல்லி நற்சகுனஞ் சொல்லுதல்.

(வேறுமெட்டு.)

554 மைந்தர் இருவரும் மாதாவுடன்
மழலைச் சொல்வார்த்தை எதுசொல்வாள்

555 கோடி யானைகள் குதிரைகளும்
கொலைக்கு அஞ்சாத சூரர்களை

556 தேசமாள்கின்ற ராஜாவையும் (நான்கு)
திக்கையும் நாங்கள் ஜயிப்பொமென்றார்

557 மந்திர மாயங்கள் கற்றோமென்றார்
மன்னர்களையும் நாம் ஜயிப்போமென்றார்

559 பாலகர் சொல்லும் வீரியத்தை
பரிவாய்க் கேட்டம்மன் மனமகிழ்ந்து

559 மைந்தர்சொல் மாதாவுங்கேட் டுகந்து
வண்ண மடிமேலே வைத்தணைத்தாள்
560 அடிசில் இட்டம்மன் உச்சியிட்டு
அழகு மைந்தர் குடுமிபின்னி
561 மருங்கு நெற்றிக்குத் திலகமிட்டு
மான் குவளைக்கு மைஎழுதி
562 யாங்காய் நாகமும் பருத்தமுத்தும்
பதிவாய் இழைத்ததோர் கடுக்கனிட்டு
563 மைந்தர் இருவரும் விளையாட
வனந்தனில் விட்டு மகிழ்ந்திருந்தாள்
564 சிறுவர் இருவரையும் அனுப்பிவைத்து
சீதா தேவியுந் தனித்திருந்தாள்
565 மாலைக் குழலாளின் தலைக்குநேராய்
மங்கள வாக்கியம் பல்லிசொல்ல
566 மைந்தரின் மாதாவுங் கேட்டுகந்து
மாத்திரைப்போதில் துகில் முடித்தாள்
567 சிறுவர் மாதாவுங் கேட்டுகந்து
சீரான பல்லிதனைப் பார்த்து
568 கரடி பன்றிகள் காட்டானைகள்
காட்டு மிருகமது பாயாமலே
569 சிறுவர் படைபண்ணித் தளராமலே
ஜயமுண்டாகவே பல்லி சொல்வாய்
570 (அப்போ) அழகு கூடல்வாய்ப் பல்லிதானும்
அருமையாகத் தான் வாய்திறந்து
571 (நான்) மலையின் குறவனோ குறத்திதானோ
மருந்துகள் சொல்லும் பண்டிதனோ
572 ஜோதிஷனோ நான் வாத்தியாரோ
(உன்போல்) சோணாட்டில் வாழும் மனுஷர்தாமோ
573 (என்று) மாலைக் குழலாளின் மனதுநோக
மணையின் சிறுபல்லி வாய்மூடிற்று
574 மாலைப் பொழுதுகள் ஆனவுடன்
மைந்தர் இருவருந் திரும்பிவந்தாள்
575 சிறுவர் இருவருந் திரும்பிவந்து
சீதா தேவியின் அடிபணிந்தாள்.

576 மைந்தர் இருவரின் முகத்தைப்பார்த்து
மாதா சீதையும் எடுத்துரைப்பள்
577 செம்பொன் அலைமோதும் சமுத்திரத்தில்
சிதறித் தவிக்கிற மீனதுபோல்
578 கப்பல் ஓடுகிற சமுத்திரத்தில்
கலங்கித் தவிக்கிற சிறுமீனைப்போல்
579 (இந்த) ஊசிநுழையாத காட்டினுள்ளே
ஓடிவிளையாடுங் கண்மணிகாள்
580 அணில்கள் ஓணன்கள் ஆந்தைகளை
அழகாய் திரிகிற கிளியினத்தை
581 பக்ஷிகள் தன்னைக் கண்ணிவைத்து
பசித்துத்திரிகிற மலைவேடர்கள்
582 (அவாள்) கூடுகட்டியே வலைவிரித்து
கோர்வையாகவே திரைவளைத்து
583 தாகம் பசியுடன் அம்பெடுத்து
(உங்கள்) தவமார்பு தன்னில் எய்தாரானால்
584 மான்குட்டியோ வென்று அம்பெடுத்து
மயிர்முடி தன்னை எய்து விட்டு
585 எய்தவேடனும் ஓடிவந்து (பார்த்து)
ஏழைத்தனஞ் செய்தோ மென்றெடுத்து
586 காசாம்பூ வர்ணர் மைந்தரிந்த
காட்டில் வருவானேன் என்றிரங்கி
587 (அந்த) வேடன் வந்து சொன்னால் கதியொழிய
வேறுகதியில்லை எந்தன் கண்காள்
588 (அம்மா) பேதையான தாயே உன்தவத்தால்
(ஒரு) பிழைகள் வாராது எங்களுக்கு
589 தசக்ரீவன் என்று உலகமாண்ட
மகாதாஷ்டிகமான ராவணனை
590 ஐயம் பிச்சையுந் தானிடாமல்
அமராளுக்கிடர் செய்த ராவணனை
591 கொடுமையால் ஆண்ட ராவணனை
(எங்களய்யர்) குலநாசமாக ஸம்ஹரித்தார்
592 தசமுடி தன்னை ஸம்ஹரித்த
சூரர்தன்னுட சிறுவர் நாங்கள்

593 எங்கள் தந்தையின் நன்மையாலே
(ஒரு) இடுக்கண் வாராதுதாயே என்றாள்
(வேறுமெட்டு முற்றும்)

594 மைதலியும் பாலகரை வாருங்களென்றழைத்து
மணமுடைய அரப்பரைத்து மஞ்சனநீராட்டி

595 சிறு குழற்கு மலர்முடித்து அரும்புகுழல் பின்னி
உவமையற்ற திருநெற்றியில் ராமர்சிலை எழுதி

596 அறமுனிவர் இல்லையிங்கே அதிதூரம் போகாதே
விஷப்பாம்பு புலிகள்உண்டு வேடருண்டு வனத்தில்

597 கடுகெனவே நானுஞ்சென்று நீராடி வருவேன்
என்னிளம் பாலரே இருங்களென்றுநதியாடவே நடந்தாள்.

அச்வமேதக் குதிரையை லவன் பிடித்துக் கட்டுதல்.

ஏலேலோ—குசலவரும் தத்தய்யா
தந்தையரை—ஜயித்தகப்பல்
(என்பதைப் பல்லவியாய் வைத்து 700-வரையில் பாடலாம்.)

598 மாதாசீதை போனபின்பு மைந்தர் இருபேரு மாய்
வாகுவில்லுந் தானெடுத்து வேட்டையாட லுற்றார் கள்

599 கந்தவேளைப் போலேயந்த காகுஸ்தர் குமாரா ளும்
அந்தரமான வனங்களெல்லாஞ் சென்றுவிளை யாடினார்கள்.

முடுகு.

600 பன்றிமுயல் மான்கரடி பலமிருகத்தைக் கொன்று
கண்டதொரு மிருகங்களெல்லாம் கலங்கிவிழத் துறத்தி

601 செம்பொன்முயல் கரடிசிங்க மான்வேட்டையாடி
விடாய்தணியக் குசலவரும் உகந்துகனி புஜித்து

602 தாகங்கெடப் பொய்கையிலே தண்ணியள்ளிக் குடித்து
தனித்தனியாய்க் குசலவனும் பிரிந்து வரும்போது

603 கொந்தளக் குழல்சுருளக் கோலவாயும் உலர
புண்டரீகக் கால்துவளப் பொன்மேனி சிவக்க

604 செழித்த வனந்தாண்டி லவன் திரும்பி வரும்போது
கனவேக அச்வமொன்று கண்ணிரண்டுங் கட்டி

605 சிலைவீர ராமரென்று திருநாம மெழுதி
திரளான சேனைகளும் பின்னாக வரவே

606 இகலான ரிஷிகள் அங்கே உன்னிக் குளம்படியை
அடிகள்போகும் வழிதனிலே ஆஹுதிபண்ணி நடந்தாள்

607 தொடர்ந்துவருங் குதிரைவெகு தூரவழி தாண்டி
வாயுவேக மனோவேகமாக வழிநடந்து
608 குறிப்புடைய ரகுநாதர் குமாரர் விளையாடும்
இலக்கமற்ற காடுதன்னில் எதிராக வரவே
609 குசன்தம்பி லவன்கண்டு கொக்கரித்து ஓடி
முனிகுமாரரானே பாரும் பரியழகை என்றான்
610 பரிமுகத்திலே யிருந்த பட்டந்தன்னைப் பார்த்து
பட்டமதைக் கயட்டியவன் பார்க்கின்றபோது
611 தசரத குமாரன் ரகுநாதனே தீரன்
(இந்தப்) பதினாலு உலகத்திலும் எதிரொருவ ரில்லை
612 (என்ற) விருதுதனைத் தான்படித்துக் குதிரைதனைப் பிடித்து
மரந்தனிலே தணைந்துகட்டி மறுவசனம் உரைப்பன்
613 ஜனகர்மகள் வயிற்றில் நாம்ஜனித்திராவிட்டால்
தசரத குமாரன் ரகுநாதனே தீரன்
614 சந்தோஷமாய் லவனுமப்போ சவுரியங்கள் பேசி
சேனைவரும் வழிகள் தன்னைப் பார்த்துமவ னிருந்தான்
615 வேள்விப்பரி தன்னையவாள் விட்டெடங் காணாதே
தேடித்தேடிப் பரியுடனே சிறுபாலரைக் கண்டாள்
616 சிறுபாலரைக் கண்டவுடன் சிறுதந்தையும் மலைத்து
(என்) பரிபிடித்து ஏன்கட்டினீர் இளம்பாலகரே என்றார்
617 பரியைவிடு மென்னவுமே பாலகனுங் கேட்டு [றான்
(பரி) உங்களுக்கு வேணுமானால் படைபண்ணிக்கொள்ளென்
618 படைபண்ணிக் கொள்ளென்ற சிறுபால லவன்மேலே
சொரிமாரிபோற் கணைசொரிந்து திகைக்கவே அடித்தார்
619 சொரிமாரிக் கணைகளெல்லாம் சூரலவன் தடுத்து
(தன்) பாரமுள்ள வில்லெடுத்து பாணமழை சொரிந்தான்
620 பாலன்விடுங் கணைவேகத்தை இளையதந்தை பார்த்து
தன் ஆர்வமுள்ள கணையுருவி பாலன்விழ அடித்தார்
621 திகைத்து வீழ்ந்த பாலகனைத் தேரின்மேலேற்றி
அசுவந் தன்னைநடத்தி ஆஹாரநிபண்ணி நடந்தார்
622 அருகில்நின்று பார்த்திருந்த அறமுனி குமாரர்கள்
விரைந்து பர்ணசாலைவந்து மிதிலைவாழ்வோ டுரைப்பார்

623 (அம்மா) யாரோவொரு ராஜாவாம் யாகம்பண்ணுராளாம்
(அந்த) வேள்விப்பரி தன்னைலவன் வாகையோடு தளைய
624 லவனுடனே யுத்தம்பண்ணி ராஜாக்கள் ஜயித்து
சிறுபாலனைத் தேரின்மேலே கட்டிக்கொண்டு போராள்
625 முனிகுமாரர்கள் உரைக்கவுமே அகிலமாதா கேட்டு
(என்) முனிகுசன் எங்கேயென்று மூர்ச்சையவ ளடைந்தாள்
626 குசன் அங்கே வனந்தனிலே அலர்ந்த புஷ்பமெடுத்து
சிறுதர்ப்பை தானெடுத்துத் திசைநோக்கி வந்தான்
627 வந்துமங்கே மாதாவின் மலரடியிற் பணிந்து
எந்தனுட தம்பிலவன் எங்கேஎன்று கேட்டான்
628 (அப்பா) யாரோஒரு ராஜாவின் யாகப்பரி தன்னை
பாலகனும் லவன்பிடித்து வாகையுடன் தளைய
629 கணைதொடுத்து யுத்தம்பண்ணி ராஜாக்கள் ஜயித்து
லவனைக்கட்டித் தேரின்மேலே கொண்டு போகிறுளாம்
630 சீரான லவனைக்கொண்டு செல்லுதற்கு முன்னால்
(உன்) சூரத்தனந்தான் காட்டிமீட்டுக் கொண்டு வருவாய்
631 (என்று) மைதலியாள் பாலகனை மனங்குளிர வாழ்த்தி
நாணும்வில்லும் தான்கொடுத்தாள் ராஜாக்களை ஜயிக்க
632 மாலயனும் சங்கரரும் மூவர் பொருதாலும்
மன்னர்கள் எல்லாம் கூடி அடங்கலுஞ் சூழ்ந்தாலும்
633 (என்) பாலகரே நீபொருது படைஜயித்து மீண்டு
பாலம்ருத மேபுஜித்து நீயிருக்கவேணும்

சத்ருக்கனரோடு யுத்தம் செய்து ஜயித்தல்

634 மாதாவை வளையவந்து மலரடிக்கீழ்ப் பணிந்து
போய்வாரேன் என்கவுமே போகவிடை கொடுத்தாள்.
635 பாரதிரக் கோஷமிட்டு வேகத்துடன் நடந்து
சேரநின்ற சேனையுடன் தேர்க்கொடியுங் கண்டான்
636 வேகத்துடனே போகும் பார்மன்னரைப் பார்த்து
(அடே) போகாதே நில்லுமென்று நாணியோசை காட்ட
637 நாணியோசை கேட்கவுமே ராமசேனை யெல்லாம்
காலனோகுசன் என்று கைகாலோய்ந்து நின்றார்
638 நின்றதொரு மன்னர்மேலே நெடுங்கணைகள் போட்டு
கொன்றுமந்தச் சேனைகளைக் குருதிவெள்ளந் தேக்கி

639 எதிர்த்துவந்த சிறுதந்தையை நிலத்தில் விழவடித்து
தம்பிலவனை மீட்டுச் சந்தோஷமாயிருந்தான்
640 சத்துருக்கன் நிலத்தில்விழத் தப்பி ஓடினோர்கள்
வணங்கி ரகுராமன்பாதம் நடுங்கியே உரைப்பாள்
641 இந்துபோல இருபாலர்கள் சென்றசேனை யெல்லாம்
நொந்துவிழ வேபொருது வந்துபரி பிடித்தாள்
642 (உம்ம) தந்தைசாயற் போலேயிரு சுந்தரரு மிருக்காள்
(உம்ம) தம்பியரை விழவடித்துச் சந்தோஷமா யிருக்காள்.

லக்ஷ்மணரோடு யுத்தம்பண்ணி ஜயித்தல்

643 தூதாஞ்சி உரைக்கலுமே ராகவருங் கேட்டு
பூமியிலே தான்விழுந்து புலம்பியே அழுதார்
644 அபிராமர் மனந்தேற்றி ஆறுதலுச் சொல்லி
இரதமேறிச் சேனையுடன் இளையவரும் போனார்
645 சேனைபட்ட பாடுகளும் சிறுவர் சூரத்தனமும்
ஆண்மைமிக்க இளையோரைக்கண்டு ஆச்சரியப் பட்டு
646 (பிள்ளைகள்) அறிவுகளை ஒழுக்கங்களை ஆண்மைசூரத்தனத்தை
களிப்புடைய குசலவரின் கந்தனைப்போல் வடிவை
647 வடிவுடைய மலர்மகளோ பூமகளோ பயின்றாள் (என்று)
வடிவுடைய பாலகரை மயங்கிப் பார்த்துநின்றார்
648 சீதையரைக் காட்டில்விட்ட சிந்தையை மறந்து
வடிவுடைய பாலகரை வாழிளங்கோ பார்த்தார்
649 இளையகோவும் பார்க்கலுமே சிறுவர்கோப மண்டி
(அட) நானேபரி கொண்டொளித்தேன் வேறு யாருமில்லை
650 பரியொளித்தேன் என்கலுமே பதைத்துப் பாலர்மேலே
(தன்) பாரமுள்ள வில்லெடுத்துப் பாணமழை சொரிந்தார்
651 வேடர்களும் வில்லியருங் கூடிப் பொருதாப்போல்
சீருடைய தந்தையரும் செல்வருமாய்ப் பொருதாள்
652 சிறுவர்விட்ட கணையுருவிச் சீரிளங்கோ விழவே
தூதாஞ்சி யோடிவந்து ராமருடன் சொன்னாள்.

பரதரோடு யுத்தம்பண்ணி ஜயித்தல்

653 இளையகோவும் விழுந்தாரென்கப் பரதர்கோப மண்டி
சகல ஆயுதமெடுத்துத் திரளாய்ச் சேனைசூழ

654 கோடிவெள்ளஞ் சேனைசூழ கொண்டல் வர்ணர்தம்பி
தேடியந்த வனத்தில்வந்து சிறுபாலகரைக் கண்டார்
655 சேனைபட்ட பாடுகளும் சிறுவர் சூரத்தனமும்
ஆண்மைமிக்க பரதர் கண்டு ஆச்சரியப்பட்டு
656 (நீங்கள்) அரன்மகனோ அரிமகனோ அயனுதி மகனோ
எவர்மகனோ பாலர்களா எனக்குரையு மென்றூர்
657 (ஐயா) நாங்கள் அரன்மகனும் அரிமகனும் அயன்மகனுமல்ல
அருந்தவஸி வால்மீகர் அடைக்கலக் குமாரர்கள்
658 குதிரைகேட்க வந்தாயோநீ குலங்கேட்க வந்தாயோ
பரிஹாஸம் பண்ணுதே இப்போ பரிவிடுவதில்லை
659 பரிவிடுவ தில்லையென்ற பாலகரின் மேலே
சொரிமாரிக் கணையெடுத்து (வெகு) சூரத்துடன்விட்டார்
660 சிறுதந்தையும் கணைசொரியச் சூரலவன் கண்டு
(தன்) கார்முகத்தைத் தானெடுத்து பாணங்களை யறுத்தான்
661 பாலகனூர் தடுக்கவுமே பரதர்கோப மண்டி
அதிசூரமாய் நாணேற்றி பாணங்களைத் தொடுத்தார்
662 அந்தரத்து தேவர்களும் அம்ருதமங்கே கொடுக்க
காரிகையாள் சீதைமைந்தர் களைதீரப் புஜித்தாள்
663 களைதீர்ந்த குசலவரும் கணைமாரி சொரிந்து
வன்மையுள்ள பரதரையும் மண்ணில்விழ வடித்தாள்
664 பரதர்கீழே விழுந்தவுடன் அருகிருந்த மன்னர்
மதிமயங்கி ஓடிவந்து மன்னர் ராமர்க் குரைத்தாள்.

ஸ்ரீராமரோடு யுத்தம்பண்ணி ஜயித்தல்.

665 ஸ்ரீராமர் அதுகேட்டுச் சிந்தைமிகத் தளர்ந்து
அனேகங்கொடி சேனையுடன் அதிவேகமாய் வந்தார்
666 அனுமானுஞ் ஜாம்பவானும் அங்கதனுங் கூட
சுக்ரீவன் சேனையுடன் சேர்ந்துமங்கே வரவே
667 ரணகளத்தை பார்த்தளவில் ரத்தவெள்ள மோடி
சேனைகளும் தம்பிமாரும் செருகளத்திற் கிடந்தார்
668 ரகுபதியுங் கண்டழுது நெடுஞ்சோக மண்டி
இன்பமான தம்பிமாரை எடுத்தணைத்துக் கொண்டு
669 பிரியமான தம்பிமாரின் பேரறிவுங் குணமும்
படைஜயித்த பாலர்முன்னே பிரலாபித்தவர் அழுவர்

670 பாரமுள்ள அயோத்திநகர் பார் அரசு தன்னைசு
(நான்) ஆளுமுன்னம் ஆளேனென்று (என்)னடி பிடித்து
671 எந்தன் பாதுகையைவாங்கித் தன்தலைமேலே கொண்டு [நடந்து
அந்தமுடன் பட்டங்கட்டி நந்திக்கிராம மிருந்து
672 அல்லும்பகலும் எனைநினைத்து அண்ணரே என்றலத்தும்
அன்புடைய பரதாதம்பி என்றணைத்து அழுதார்
673 கானகத்திலே திரிந்து எந்தனுக்குத் துணையாய்
காய்கனியும் புஜியாமல் கண்க ளுறங்காமல்
674 அல்லும் பகலும் பணிவிடைகள் அன்புடனேசெய்த
இன்பமுள்ள இளையதம்பி என்றணைத்து அழுதார்
675 சாகாத லவணாஸுரன் தனைக்கொன்ற சூரன்
(உன்) அம்புவில்லின் சேவகமும் எங்கே போச்சுதையா
676 (என்) பின்பிறந்த சேவகனே மின்னனையாள் மகனே
எங்கள் மூவருக்கும் இளையவனே என்றணைத்து அழுதார்
677 அழுதுதெளிந் தெழுந்திருந்து அதிகோபத் துடனே
(நீ) ஆரடா என்பரிபிடித்து வேள்விதனைக் குலைத்தாய்
678 (என்று) பங்கயச்சீர் கண்கள்ரெண்டும் செங்குருதி மண்ட
மைந்தருடன் மார்புதட்டி வந்தெதிரே நின்றார்.
679 (நீங்கள்) அருந்தவசி புத்திரரோ அண்டர் பெருமானோ
அரி அயனார் தன்மகனோ அறியவுரை என்றார்
680 அரி அயனார் மகனுமல்ல அண்டர் பிரானுமல்ல
அருந்தவசி வால்மீகர் அடைக்கலக் குமாராள்
681 குதிரைகேட்க வந்தாயோ நீ குலங்கேட்க வந்தாயோ
பரிஹாசம் பண்ணாதே இப்போ பரிவிடுவதில்லை
682 குடிநலமுங் குலநலமும் கோத்திரமுங் கேட்டாய்
ஈனனோநீ ராஜாவே என்றுசொல்லி நகைத்தார்
683 நகைக்கலுமே குசலவர்கள் ராமர்பாண மெடுத்து
குறிப்புடைய கோதண்ட வில்லும் நாணும் பூட்டி
684 கடுகடுத்துப் பாலகர்மேல் கணைமாரி சொரிய
சொரிந்தகணை மாரிகளைச் குசலவர்கள் அறுத்தாள்
685 கண்டுரகு ராமரப்போ கடுங்கோபத் துடனே
பரிவுடைய பாலகர்மேல் பாணமழை சொரிந்தார்

686 இந்திரரும் ஈஸ்வரரும் நின்று பொருதாப்போல்
சந்திரரும் சதுர்முகரும் தானும் பொருதாப்போல்
687 மந்திரகிரி தன்னுடனே அண்டம் பொருதாப்போல்
பந்தமுள்ள மைந்தருடன் தந்தையரும் பொருதார்
688 மைந்தருட வீரியத்தை வைதேகி கேட்டுப்புகழ
அருமைமைந்தர் கணையினாலே அபிராமர் விழுந்தார்
689 நால்வர்களும் விழுந்தவுடன் பாலகருங் களைத்து
தாகங்கெடப் பொய்கையிலே தண்ணியள்ளிக் குடித்து
690 பார்த்துமந்தப் படுகளத்தைச் சீக்கிரமாய் லவனும்
கோப்புடைய ரகுநாதர் குண்டலமும் பணியும்
691 வாய்த்தமன்னர் மகுடங்களும் வாழ்பரதர் அணியும்
காக்ஷியுள்ள சிறுதந்தைமார் கைவளையும் பறித்தான்
692 தூரநின்று மனதுநொந்து ஜாம்பவந்தர் அனுமார்
அபிராமர் படுகளத்தைக் கண்டு மனமிளகி
693 அதிசூர ராக்ஷத ராவணனைக் கொன்றதீரன்
(உம்ம) அம்புவில்லின் சேவகமும் எங்கே போச்சுதையா
694 அனுமாருஞ் சாம்பவானும் அழுதுபார்த்தே இருக்க
(அதைக்) கண்டுமந்த லவனுமப்போ அண்ணருடன் சொல்வன்
695 (நம்ம) வாய்த்தசீதை மாதாவுக்குக் காட்டவேணு மென்று
மாருதியைச் சாம்பவானைவரிக்கயிற்றால் தணைந்தான்
696 மாதா சீதைஎன்று சொல்ல மாருதியுங் கேட்டு
தாயாரைக் காண்போமென்று சந்தோஷமாய் வந்தார்
697 மணிமகுட மூட்டைதனை மாருதி மேலேற்றி
வரிக்கயிற்றைக் கைப்பிடித்து இழுத்துவனங் கடந்தாள்
698 இருண்டஅந்தச் சோலைதாண்டி (ரிஷி) ஆசிரமத்தில் வந்து
பாகுவில்லைத் தானிறக்கி மாதா அடிபணிந்தாள்
699 பணிந்தெழுந்த பாலகரைப் பரிவுடனே அணைத்து
இருவரையும் உடன்நிறுத்தித் திருவந்திக் காப்பெடுத்தாள்

கப்பல்மெட்டு முற்றும்.

700 பூவண்டங்கள் புவனண்டங்கள் போரப்பயின்றவளே
பூமகளின் திருமகளே புண்ய ராஜர் தேவி
701 காகுஸ்தனார் தேவியரே கருணையுள்ளதாயே (என்று)
மாருதியும் ஜாம்பவனும் மாதா அடிபணிந்தார்

702 மாருதியை ஜாம்பவானை மைதலியும் வாழ்த்தி
(என்) சிறுபாலர்காள் நீங்களிவரைச் சேவியுங்க ளென்றாள்
703 (அம்மா) எந்தவனம் பார்த்தாலுஞ் செங்குரங்கு உண்டு
இந்தவொரு குரங்குதன்னை ஏன்பணிவ தென்றார்
704 (அப்பா) என்னாவி குன்றிப்போகாது காத்ததிந்த அனுமார்
அரக்கர்குலச் சேனைவிழ அடித்தாரிந்த அனுமார்
705 (நான்)சீவன்விடும் வேளையிலே காத்தாரிந்த அனுமார்
தென்னிலங்கா நகரந்தனைச் சுட்டாரிந்த ஹனுமார்
706 (என்) சிறுபாலரே நீங்களிவரைச் சேவியுங்க ளென்க
மாதாசொல்லைத் தட்டாமல் மைந்தர்களும் பணிந்தார்
707 மாருதியை ஜாம்பவானை மைந்தர்களை வைத்து
காய்கனி கிழங்கமுது கலந்துமங்கே போட்டாள்
708 மைதலியாள் கனியளிக்க மாருதியும் புஜித்து
போய்வரோ மென்றுசொல்லப் போகவிடை கொடுத்தாள்.

மைந்தர்மேல் காயங்களைக்கண்டு சீதாதேவி சோகித்தல்.

709 மைதலியாள் பாலகரை மடியில் வைத்துக் கொண்டு
பண்டு வாழ்ந்த போகந்தன்னை பாரதத்தை நினைத்து
710 சுந்தரமாம் மைந்தருட காயங்களைப் பார்த்து
இந்துமதி வாழ்முகத்தாள் ஏங்கிஏங்கி அழுதாள்
711 அறியாத சிறுபாலர்கள் அச்வந்தனைப் பிடித்தால்
வேள்விநின்று போமேயென்று வேண்டியன்றே கொள்வார்
712 பாணமழை தான்சொரிந்து வாடஅடிப்பா ருண்டோ
அம்புவில்லாலே பொருதுஅஞ்ச அடிப்பாருண்டோ
713 ஆருமில்லாத இந்த அருங்காடு தனிலே
நான்பரதேசி பெற்றபிள்ளை பரதவிக்கலாமோ
714 அகதி பரதேசி என்பார் ஆருமற்றார் என்பார்
அறமுனியின் சிஷ்யரென்பார் அறத்துப்பிள்ளை என்பார்
715 காகுஸ்தரும் தம்பிமாரும் கருணைக்கடல் என்பார்
(என்) கடும்பாலர்மேல் கணைகள்விடக் கையு மெழும்பிற்றோ
716 (என்று) சோகிக்கவே ஜானகியும் சுற்றிலுள்ள மாதர்
சூரரம்மா உன்குமாரர் சோகம்விடும் அம்மா
717 (அந்த) ஹரிவம்சர் நால்வரையும் உன்பாலர் விழவடித்து
அறியாதுபோல் உன் பாலர்கள் (உன்) அருகில் வந்தா ரம்மா

718 வைதேகி தான்கேட்டு மனநுமெத்தக் கலங்கி
அதுவும்விதி வசமோவென்று ஆரணங்கு மழுதாள்
719 மாதாசீதை அழுதிடவே மைந்தர்களுந் திகைத்து
அந்தஹரிவம்சர் நால்வருட ஆண்மைகளைச் சொல்வாள்
720 அதிர்ந்துவந்த சேனைகளை அமர்க்களத்தில் ஜயித்து
திரும்பிநாங்கள் வந்ததுவும் தெய்வகிருபை யம்மா
721 அடர்ந்துவந்த சேனைக்கெல்லாம் அதிகாரி ஒருத்தன்
(அவன்) மதிமுகத்து வடிவழகைச் சொல்லி முடியாது
722 வளைந்த புருவத்தழகும் முகிழ்போன்ற மூக்கும்
மண்டலம்போல் திருநெற்றியும் விசாலமானவிழியும்
723 சிவந்த அதரத்தழகும் செவ்வாயுங் கண்டு
செய்வதொன்றுந் தோன்றுமல் திகைத்துநின்றோம் அம்மா
724 முகில்நீலம் பூப்போலே இருக்குமவர் மேனி
முந்திவந்த சேனைக்கெல்லாம் முதலாளி யவனும்
725 (அவர்) ஆக்ஷியுள்ள பொற்றேரும் ஆனைசேனை யுடனே
அட்டம்நமக் கில்லையென்று அவர்பொருதா ரம்மா
726 அந்தச் செல்வத்துடன் வந்தவரைச் சிந்துசிந்தாயடித்து
சுற்றிநிற்குஞ் சேனைகளை சிதறநாங்கள் துரத்தி
727 மன்னரந்த ராஜரையும் மண்ணில்விழ வடித்து
மாதாவே உம்முடைய அருகில்வந்தோ மென்றுள்
728 அன்புடைய பாலர்சொன்ன அடையாளங் கேட்டு
மன்னவனுர் ராமரென்று மனதிலெண்ணி யழுதாள்
729 சீதையருந் தானழுதே வசிறுவர்களும் வருந்தி
மாதாசீதை முகநோக்கி மைந்தர்களு முரைப்பார்
730 (அந்த) அமர்க்களத்தில் விழுந்தமன்னன் அதிகஉறவுண்டோ
அன்னையரே எங்களுட தந்தைஎங்கே என்றுர்
731 (அந்தப்) போர்க்களத்திலே விழுந்த புகழ்வீர மன்னர்
பூங்கிளிகாள் உங்களுட தந்தையவ ரென்றுள்
732 தந்தைஎன்று சொல்லலுமே (பிள்ளைகள்) சகிக்க அறியாதே
தாயாரே நீரவரைப் பிரிந்தவகை யென்ன
733 உத்தரங்கள் சொன்னீரோ உம்மையறியாதே
உம்மையிந்த வனந்தனிலே தனித்துவிட்டதென்ன

734 சத்தியங்கள் தப்பினீரோ தாயாரே சொல்லும்
(சற்றுந்) தாக்ஷண்ய மன்றியிலே தள்ளிவிட்ட தென்ன
735 (எங்கள்) சீருடைய தந்தையரும் செல்வநகராள (இந்தச்)
செங்காட்டு வனந்தனில் நீர் இருந்தவித மென்ன
736 (எங்கள்) புகழுடைய தந்தையரும் (இந்தப்) பூமிதனை யாளப்
பொடிவீசும் கானகத்தில் நீர் இருந்த விதமென்ன
737 உத்தமியே தாயாரே உம்மையொன்றுஞ் செய்யோம்
எங்கள்உயிருடனே அங்கந்தனை உயிர்மாய்த்துக்கொள்வோம்
738 உத்தமியே தாயாரே ஒளியாமல் உரையும் (என்று)
ஓங்கியந்தப் பாலகரும் வாளெடுத்து நின்றுர்.

பாலகருக்கு சீதாதேவி தன்சரித்திர முரைத்தல்.

739 அருமைமைந்தர் சமத்துக்களும் ஆண்மைகளுங் கண்டு
மைந்தர்கட்கு மனக்குறையை மாதா சீதையுரைப்பாள்
740 மண்டலத்தில் ஒருத்தரில்லை (என்) மனக்குறைகள் சொல்ல
மாதமொன்றும் போராது (என்) குறைகள் சொல்லிமுடிக்க
741 அந்தமுள்ள கலப்பையுழும் பூமியிலே பிறந்தேன்
ஆகாசவாணி எந்தன்தந்தை என்று சொல்வாள்
742 பொன்கலப்பை கொண்டுழுத பூமியிலே பிறந்தேன்
புகழுடைய ஜனகராஜா அரண்மனையில் வளர்ந்தேன்
743 அயோத்திவாழும் தசரதனுர் மைந்தரங்கே வந்து
அழகான வில்முறித்து மணம்புரிய நினைத்து
744 சரப்பளியும் பதக்கங்களும் தன்தோளில் துலங்க
சகலபேருங் கொண்டாடத் தனுவொடித்து நின்றுர்
745 ஜனகரப்போ கொண்டாடித் தாரையது வார்க்க
ஆனையின்மே லேறிமண மாலையிட்டுக் கொண்டோம்
746 மாலையிட்டு அயோத்திவந்த மன்னர்ராமர் தனக்கு
செம்பொன்முடி சூட்டவென்றே தசரதர் சோடித்தார்
747 மாதாவென்னுங் கைகேசி கேட்டவரத்தாலே
வனவாஸம் போகவென்று வாழ்த்திவிடை கொடுத்தாள்
748 மாதாவாக்கியம் நிறைவேற்றி வனந்தனிலே நடந்தோம்
அழகான பர்ணசாலை தன்னில்நாங்க ளிருந்தோம்
749 அமர்ந்து நாங்களிருக்கும்போது அதிபாவி மாரீசன்
ஆச்சரியப் பொன்மானுய் எங்களருகினிலே வந்தான்

750 மாயமான் என்பதைநான் மனதிலே எண்ணாமல்
மான்பிடித்துத் தாருமென்றேன் மகானுபாவ ரோடே
751 அதிதூரம் நடந்துராமர் அம்பெடுத்து எய்ய
ஆ சீதா லக்ஷ்மணா என்றலறி விழுந்தான்
752 அலறியவன் விழுந்தவுடன் என் ஆகாத காலம்
அபிராமர் தளம்புகின்றார் அடவியிலே என்றேன்
753 மன்ன ரபிராமருக்கு வாராதுபய மொன்றும்
சிந்தைகலங் காதீரென்று சீரிளங்கோ வுரைத்தார்
754 மதியுரைத்த இளங்கோவுக்கு மகாகொடிய வார்த்தை
(என்) வாயினாலே சொல்லிவிட்டேன் வருவதறியாதே
755 சீரிளங்கோ தான்கேட்டு செவியிரண்டும் பொத்தி
அபிராமா என்றுசொல்லி அண்ணருகினிலே சென்றார்
756 சன்யாசி வேஷங்கொண்டு சாகஸ ராவணனும்
தேரின்மேலேற்றி என்னைத் தென்னிலங்கை சென்றான்
757 அசோக வனந்தனிலே அருஞ்சிறையில் வைத்தான்
வானர சேனைகளுடன் வந்து ரகுராமர்
758 அணைகள்கட்டிச் சேனையுடன் அலைகடலைத் தாண்டி
அரக்கன் இந்திரசித்தன் கும்பகர்ணனையும் கொன்று
759 தணல்வளர்த்துத் தெளிவுகொடுத்து ஸகலவரும் போற்ற
சந்தோஷமாய்த் தேரேறி அயோத்திவந்து சேர்ந்தோம்
760 செல்வமுள்ள ராமருடன் சிலகாலம் வாழ்ந்தேன்
சென்றொருக்கால் வனங்காண வேண்டுமென்று சொன்னேன்
761 அரக்கன்சிறை கொண்டுபோன அபவாதச் சொல்லால்
அடவியிலே கொண்டுவந்து தனியேவிட்டுப்போனார்
762 அபிராமரை நான்பிரிந்து அழுதுநிற்கும் போது
அறமுனிவர் வால்மீகர் கிரகந்தனில் வாவென்றார்
763 வால்மீகர் கிரகந்தனிலே வந்திருக்கும் போது
மைந்தர்களே உங்களையும் மனமகிழப் பயின்றேன்
764 அன்புடைய வால்மீகர் ஆதரவால் வளர்ந்தீர் [தாள்.
(என்று) பண்டுவாழ்ந்த போகந்தன்னைப் பாலகருக் குரைத்

ஸ்ரீராமர் முதலியோரை வால்மீகர் எழுப்புதல்.

765 நாரதரும் ரணகளத்தில் நால்வர் முகங்கண்டு
வால்மீகர் எக்யம் பண்ணும் பாதாளம்நடந்து

766 அரிவம்சாள் நால்வரையும் (உம்ம) சிஷ்யாள் விழவடித்தார்
வால்மீகரே நில்லாதேயும் வாருமய்யா வென்ருர்
767 வால்மீக ரதுகேட்டு மனதுமெத்த இரங்கி
ராமர்சேனே முகநோக்கி ரணகளத்தில் நடந்தார்
768 ரணகளத்தைப் பார்த்தளவில் ரத்தவெள்ள மோடி
சிலேமன்னவர் நாலுபேரும் செருக்களத்தே கிடந்தாள்
769 சிங்கத்துக்குப் பிறந்ததுகள் சிங்கங்கள் ஆகாதோ
சிறுவரான போதிலும் சீதையரு ளன்ருே
770 கமண்டலத்தின் ஜலமதனேக் கைதனிலே யள்ளி
சிலேமன்னவர் நால்வர்மேலுஞ் சேனேமேலுந் தெளித்தார்
771 அறமுனிவர் தெளிக்கலுமே அனேவர்களுந் தெளிந்து
ஸகலரும் விடாய்தணிந்து சடுக்கெனவே எழுந்தாள்
772 எழுந்தவுடன் சேனேகளும் ராகவருங் கூடி
அறமுனிவர் தாளிணையில் அனேவர்களும் பணிந்தாள்
773 அறமுனிவர் மனமகிழ்ந்து அபிராமர் முகநோக்கி
மகவேள்வி முடியுமென்று மகமுனியும் உரைத்தார்
774 வால்மீகர் உரைக்கலுமே மன்னர் ரகுராமர்
ஜானகி மனேகரனர் தவசியுட னுரைப்பார்
775 சுபாகுவையும்தாடகையையும் தசக்ரீவன் தனேயும்
வாலியையும் மார்புபிளந்த மகிமை யறிவீரே
776 (ஐயா) வந்தசேனை சமுத்திரத்தை மண்ணில் விழவடித்து
(என்) தம்பிமாரை விழவடித்து என்னெதிரில் நின்று
777 ஈனனேநீ என்றுகேட்டு எந்தனேயுஞ்ஜயித்த
(உம்ம) பாலகர்க்குச் சொல்லிஎந்தன் பரியைவிடு மென்ருர்
778 வால்மீக ரதுகேட்டு மனதுமெத்த இரங்கி
ஜானகியாள் பாலரிடம் தானுமங்கே வந்தார்
779 அகிலபுவன நாயகரின் அண்டர் பெருமானின்
ஆதி ரகுநாதருட வேள்வி குலேப்பாளோ
780 காற்றுமாகித் தீயுமாகித் கலந்திருப்போர் அவரே
கௌஸலேயாள் திருவயிற்றில் அவதரித்த மணியை
781 மாற்றில்லாத செம்பொன்னே மன்னர்கள் நாயகரை
மனதுநோகச் செய்வீரோ (சீதை)மைந்தர்காள் என்றதட்டி
782 பரியைவிடும் பாலகர்காள் என்று சொல்லக் கேட்டு
பாலகர்கள் பயந்தவர்போல் வால்மீகரோ டுரைப்பர்.

சிறுவர்கள் தாங்கள் குதிரையைப்பிடித்துக் கட்டியது நியாயந்தர்னென்று வால்மீகருடன் சொல்லுதல்.

783 (அவர்) நாடுதன்னிற் புகுந்தோமோ நகரில் புகுந்தோமோ
ராமருட அச்வமேதம் நாங்கள் அறிவோமோ
784 விடுதிதன்னிற் போனேமோ (வெண்) புரவி பிடித்தோமோ
ராஜாவின் அச்வமேதம் நாங்கள் அறிவோமோ
785 முனிகுமாரருடன் கூடி விளையாடும் வனத்தில்
வந்துநின்ற புரவிதன்னை வளைத்து நாங்கள் பிடித்தோம்
786 பாரியுமில்லா தவர்க்கு ஓமம்வேள்வி உண்டோ [லமைத்தார்
(ராஜா) பணம்படைத்த கர்வத்தினுல் பாரியைப்போ
787 பரிமுகத்திலே யிருந்த பிரதாபந்தன்னைப் பார்த்து[டோம் பரியை
(ராஜா) சௌரியத்தை யறிவோமென்று நிணத்துக்கொண்
788 மறைந்திருந்து மடிய அடிப்பாள் வழிவழியா யவர்கள்
சாகாத லவணாசுரனை (சத்துருக்கன்) வழிமறித்து அடித்தான்
789 சுக்கிரீவ ராஜருட தோழமையை வேண்டி
மகாசூர வாலிதன்னை (ராமர்) மறைந்திருந்து அடித்தார்
790 உளவனுட சொற்கேட்டு ஓடியே வானரங்கள்
உவப்பான யாகமெல்லாம் ஒருநொடியிற் கெடுத்து
791 (அந்த)வீரியம்போன இந்திரஜித்தை வேதியரை வதைத்த
(இளையோன்) வீரியத்தை அறிவோமென்று வெண்புரவி
792 கார்த்திகே யார்சுனனுலும் வாலிகையினுலும் [பிடித்தோம்
கைலாச மலையினுலுங் கனநெருக்கப் பட்டு
793 (ஒரு) ஆவிபோகாதிருந்த (கையால்) ஆகாத ராவணனை [டார்
அடித்தோமென்ற கர்வத்தினுல் (ராஜா) அச்வந்தன்னை விட்

சிறுவர்கள் பரியைவிட ஸ்ரீராமர் யாகம் முடித்தல்.

794 தபஸிகீ ரானதனுல் ராஜருக்குப் பயந்தோம்
(என்று) தாமரைக்கண்ணீர்தளும்ப ஜானகியுட மைந்தர்
795 பரிதன்னை அவிழ்த்துவிட்டு பயந்தவர்போ லிருக்க
(அபி)ராமர் முன்னே கொண்டுவிட்டு அறமுனிவர்வந்தார்
796 வந்துநின்ற அச்வந்தன்னை மன்னராமர் பார்த்து
யாகம்நிறை வேற்றுமென்று ரிஷிகளுடன் உரைத்தார்

797 வசிஷ்டரோடு மகாமுனிகள் மனது மெத்த மகிழ்ந்து
யாகந்தன்னைப் பூர்த்திசெய்து அனைவரும் வீற்றிருந்தார்
798 வந்துமந்த வால்மீகர் மைதலியைத் தேற்றி
மைந்தர்களும் அடிபணிய வாழ்த்திமனம் மகிழ்ந்தார்
799 (நீங்கள்) அபிராமர் புத்திரராய் அயோத்திக் கதிபதியாய்
தசரதன்தன் பேரன்மாராய் சீதைக்கொரு மணியாய்
800 களித்துமிக வாழ்வீரென்று கண்திருஷ்டி வாராதே
தவமுனிவர் வால்மீகர் திருஷ்டியது கழித்தார்
801 திருஷ்டிசுற்றிப் போட்டவழகை சீதையருங் கண்டு
தன்தந்தை ஜனகரைப்போல் தன்மனதில் எண்ணி
802 (அய்யா) அந்நேரப் போதையிலே அனல்வீசுங் காட்டில்
மத்தியான வேளை தன்னில் புலியுறுமுங் காட்டில்
803 சிறுநெருஞ்சி முள்ளுடைய தீயவனந்தன்னில்
தள்ளியென்னை விட்டவுடன் நான் தவிக்கின்ற போதில்
804 நெஞ்சில்நிலை கொள்ளாமல் நின்றுதவிக்கும் போது
அஞ்சாதே என்றுசொல்லி ஆதரித்து வந்தீர்
805 ஜனகரிலும் அதிகமாகச் சீராட்டி வளர்த்து
தயவுடனே குசலவர்க்கு சகலவித்தையுரைத்தீர்
806 சீர்பெறவே நீர்வளர்த்த சிறுவர் குசலவனும் [ஜயித்தாள்
(உம்ம) தவமகிமையாலன்றோ (பிள்ளைகள்) தந்தையரை

குசலவாள் அச்வமேத மகாமண்டபத்தில் இராமாயணத்தை ஸ்ரீராமர்முன் பாடுதல்.

807 அகிலபுவனம் பயின்ற அறமணமே ஜானகி
அரக்கர்குலம் வேரறுத்த அபிராமர் கடாக்ஷம்
808 அனல்முழுகித் தீக்குளித்த அன்னையுட கிருபையால்
அருமையுள்ள மைந்தர்களும் அனைவர்களை ஜயித்தார்
809 (என்று) மைதலியாள் ஜானகியின் மனமகிழச் சொல்லி
மைந்தர்களின் முகம்பார்த்து வால்மீகர் உரைப்பர்
810 மகிமையுள்ள ராமகதை ராமர்முன் பாடவேணும்
என்றுசொல்லி யாகசாலை தன்னில்கொண்டு விட்டார்
811 விட்டபின்பு குசலவரும் வீணைகையிற் பிடித்து
அக்ஷரப்பிழை யில்லாமல் அரும்பு முறியாமல்

812 ஒப்பற்றவர் வார்காதில் குண்டலமும் விளங்க
பூர்ண சந்திரன் போல்முகத்தில் புன்சிரிப்பின் ஒளியும்
813 சாய்ந்த குஞ்சியின் அழகும் சிறுவருட அழகும்
விஸ்தார நெற்றிதனில் கஸ்தூரிப் பொட்டொளியும்
814 சித்தரோடு கின்னரரும் வெட்கித் தலைகுனிய
சர்க்குணமாம் ராமகதை தப்பாமலே படித்தார்
815 சர்க்குணமான கதையை சகலவருங் கேட்டு
ஒப்பற்ற பாலகர்மேல் புஷ்பம் வருஷித்தாள்
816 சிறுவருட வடிவழகை ஸ்ரீராமரும் உகந்து
பரிவான தம்பியரைப் பார்த்துமவர் உரைப்பர்
817 இந்துபோல பாலகர்கள் இவ்வயது தனிலே
கோகிலங்கள் போலிருந்து கீர்த்தியுடன் பாடி
818 கொஞ்சும்கிளிபோ லிருக்கும் பாலகர்கள் தனக்கு
பச்சைசால்வை முத்துக்குல்லாய் பருத்தமுத்து மாலை
819 உருண்டமுத்து மாணிக்கத்தால் உச்சிதமாம் பணிகள்
சீருடனே கொண்டுவந்து சிறுவருக்கு அளியும்
820 அளியுமென்று சொன்னவுடன் அன்புடைய பரதர்
கொத்தளப்பொன் சரக்கறையைத் திறந்தெடுத்து வந்து
821 பாலகனர் இருவருக்கும் பரிசுரொம்ப அளிக்க
சிறுபாலகர்கள் தான்நகைத்து ஸ்ரீராமருக்கு உரைப்பர்
832 ஐயா கானகத்திலே திரிந்து வால்மீகர் அருளால்
காய்கனி கிழங்குகளைக் கலந்து புசிப்போர்க்கு
823 சீருடைய வரிசை எல்லாம் தேவையில்லை நமக்கு
ஏத்தமான உடுபணதி இருக்கட்டும் உங்களுக்கு
824 பட்டமாளும் ராஜர்களுக்குப் பட்டுக் குடை வேண்டும்
முடிபொருத்த மன்னருக்கு முத்துக் குல்லாய் வேண்டும்.

ஸ்ரீராமர் குசலவாள் தன் புத்திரர்களென்று வால்மீகரால் அறிதல்.

825 (என்று) மைந்தர்களும் உரைக்கவுமே வால்மீகர் வருந்தி
மன்னராமா உம்முடைய மைந்தரிவா ளென்றூர்
826 மைந்தரிவாள் என்கவுமே மணிப்பரதர் உகந்து
இன்பமுள்ள பாலகரை எடுத்தணைத்துக் கொண்டு
827 பண்டுவாழ்ந்த போகந்தன்னை பாரதத்தை நினைத்து
பாலகரை மடியில்வைத்து பரதர் சொல்லி அழுவார்

828 (நாங்கள்) தசரதர் குமாரர்களாய்ப் பிறந்தநாள் துவக்கி
என்னசுக மெங்களுக்கு இந்தப்பூமி தனிலே
829 சிலநாட்கள் கழிந்தபின்பு சடைநாங்கள் தரித்தோம்
(நீங்கள்) பிறக்கிறத்தே சடைதரித்த சிறுமைகள் ஆராதே
830 பரதாழ்வார் கண்கள் இரண்டும் ப்ரவாக நதிபோல
தாராளமாய்ப் பெருக சேஷாத்திரி உரைப்பர்
831 பரதாநீ என்ன செய்வாய் பாவியாகநானும்
தோஷமென்று பாராதே தூர அடவி தன்னில்
832 சிங்கங்களுக் கிரையாகச் சீதையரை விட்டேன்
(என்று) ஏங்கியே தானழுது இளையகோவும் உரைத்தார்
833 தயங்கியே மிகவழுது சத்துருக்கனரும்
லவணாஸுரனை வதைத்த அன்றிராத் தரித்தேனங்கே
834 மைந்தரவாள் பிறந்ததுவும் (வால்மீகர்) மகதானஞ் செய்ததுவும்
அறிந்துநான் தானிருந்தும் அறியாதுபோ லிருந்தேன்
835 அன்புடைய பாலகரைக் காண ஆசை இருந்தும்
ஆற்றமாட்டாள் ஜானகி என்று அறியாதபோல் வந்தேன்
836 தம்பிமார் மூவர்களும் சகிக்காமலே அழுது
மன்னர்ராமர் மடியின்மேலே மைந்தர்களை வைத்தாள்
837 மடியிருந்த பாலகரை மன்னர் ரகுராமர்
அன்புடனே தானணைத்து அபிராமர் உரைப்பார்
838 அதிக பரதேசிகள்போல் ஆருமற்றார் போலே
காய்கனிகளைப் புஜித்து (என்) கண்காள் வளர்ந்தயளோ
839 அறமுனியின் சிஷ்யர்களா உங்களன்னை எங்கேஎன்க
வால்மீகர் அதைக்கேட்டு மனதுமெத்த மகிழ்ந்து
840 வைதேகி ஜானகி என்மனைதனிலே இருக்காள்
கபடம்நீர் எண்ணினுக்கே காகுஸ்தரே கேளும்
841 (நான்) ஆயிரம் கோடிகாலம் தவங்கள் செய்ததெல்லாம்
விழுந்துபோகக் கடவதென்று முனிசபதஞ் செய்தார்
842 கல்மிஷங்கள் இல்லை அய்யா வைதேகி யிடத்தில்
(என்று) காகுஸ்தனுர் ராமருடன் வால்மீக ருரைத்தார்
843 முனிசபதஞ்செய்யவுமே அனைவர்களும் பயந்தாள் [மென்றார்
அபிராமர் முனியைப்பார்த்து (சீதையை) அழைத்துவாரு

சீதாதேவி ஸ்ரீராமரிடம் வருதல்.

844 வால்மீகர் ஓடிவந்து மைதலியைப் பார்த்து
பனிரெண்டு ஆண்டின்தவசு பலித்ததம்மா உனக்கு
845 (உம்ம) பிராணனான நாயகரின் பாதமலர் காண
வாரும் அம்மா வென்றுசொல்லி மாமுனியும் அழைத்தார்
846 வால்மீகர் உரைக்கலுமே சீதைமன ஸ்தாபமாறி
மகாமுனிவர் தன்னுடனே வைதேகி நடந்தாள்
847 புஷ்பகத்தில் ஏறிவரும் புண்டரீகமாது
பூமியிலே நடந்துவந்தாள் பொன்னடியுஞ் சிவக்க
848 பார்த்திருந்த பேர்களெல்லாம் பரிதாபம்மண்ட
பங்கயச்சீர் கண்ணாளும் பாதநோக நடந்தாள்
849 உடுத்த காஷாயத்துடன் உடம்பு தன்னையொடுக்கி
ஹம்ஸம்போலவே நடந்து ஸ்ரீராமரடி பணிந்தாள்
850 அடிபணிந்த ஜானகியை அபிராமரும் பார்த்து
பொற்கொடியே உன்மனதைப் பொருந்த நானறிவேன்
851 ராக்ஷதர்கள் தானறிவாள் லக்ஷ்மணர் அறிவர்
(இந்த) அநேகங்கோடி மானிடர்கள் அறியமாட்டாளென்றார்

சீதாதேவி ராமரிடம் சபதஞ்செய்து பூமிக்குள் செல்லுதல்.

852 ஜொலிக்கின்ற அக்கினிபோல் இருக்கும் சீதைதன்னை
ஸ்ரீராமர் நிந்தைபண்ண (இந்த) தேகமிருந்ததன்றோ
853 நிறைந்த சபைதனிலேநான்நின்ற நிலைபோதும்
நீதியாக எந்தனுக்குப் பூமி யிடந்தாரும்
854 பொற்கொடியாள் உரைக்கலுமே பூமிவழி பிளந்து
பொன்னுமணித் தேறிலேற்றி பூமிகொண்டு சென்றாள்
855 நாகலோகக் கன்னியர்கள் நத்தி மலர் தூவி
திருவடியிலே பணிந்துசென்றழைத்துக்கொண்டாள்.

ஸ்ரீராமபிரான் உத்திரவால் பூமாதேவி சீதையைக் கொணர்ந்து விடுதல்.

856 புருஷோத்தமர் தான்கலங்கி (புருவ) நெறித்துக்கொண்டு
பார்மகளும் அறியாளோ என்பராக்கிரமந்தன்னை
857 தரணிதன்னை பிளந்திடுவேன் சமுத்திரத்தைப் பிளப்பேன்
சடுதியிலே கொண்டுவந்து ஜானகியைத் தராட்டால்

858 புருஷோத்தமர் சினந்துரைக்க பூமிமெத்த நடுங்கி
பொன்னுமணித் தேரோடு பூமிகொணர்ந்து விட்டாள்
859 மகிழ்ந்துமந்த ராகவரும் மைதலியா ளுடனே
பாலகனு ருடன்கூடிப் பட்டணம்போய்ச் சேர்ந்தார்.

கௌஸலையம்மன் மருமகளையும் பேரன்மாரையும் தழுவி அணைத்து வாழ்த்துதல்.

860 கௌஸலையும் சுமித்திரையும் மருமகளைக் கண்டு
கமலநயனம் உருகி கலங்கிமெத்த அழுதாள்
861 மைந்தர்களைக் கௌஸலையும் மடிதனிலே வைத்து
பண்டுவாழ்ந்த போகந்தனைப் பாரதத்தை நினைத்து
862 வடிவுடைய பாலகரும் என்மாளிகையில் பிறக்க [றழுதாள்
(நான்) மாதவங்கள் செய்யல்லையே (சீதை)மைந்தர்கா ளென்
863 நவரத்தினத்தா லிழைத்த நல்லமண்டபத்தில்
மதிப்புடைய மைதலியாள் பாலரிங்கே பிறக்க
864 (நான்) குறிப்புடைய கோ கோடி குஞ்சரங்கள் கோடி
அதிதுரிதமாய் விளங்கும் அச்வம்ஒரு கோடி
865 மகத்துக்களுக்கு தானம்செய்து மகிழ்ந்திருக்க பூஜை [தாள்
(நான்) மாபாவி செய்யல்லையே (சீதை) மைந்தர்கா ளென்றசி
866 மஹானுபாவர் பேரன்என்றும் மன்னன்பிள்ளை என்றும்
கதிர்குலத்தை ஈடேற்றும் காதலர்க ளென்றும்
867 குவலயத்தோர் கொண்டாடக் குமரர் வளராதே
(என்) அறிவுகெட்ட பிள்ளையாலே அவபலன் கண்டேனே
868 (அப்பாநீங்கள்) ஆல்போலவே தழைத்து அருகுபோல் வே
மூங்கில்போலவே சுற்றும் முகியாமலே வாழ்வீர் [ரோடி
869 (என்று) மைந்தர்களை ஜானகியை மகிழ்ந்து மிகவாழ்த்தி
கௌஸலையும் சுமித்திரையும் களிப்புடனே இருந்தாள்
870 அபிராமரும் சீதையுடன் அருமை மைந்தரோடும்
தம்பிமா ருடன்கூடிச் சந்தோஷமாய் வாழ்ந்தார்

ஓம் சுபம்.

பரதேவி துணை.

விளம்பரம்.

R. S. சுபலக்ஷ்மி அம்மாளால்

பிரசுரிக்கப்பட்ட புஸ்தகங்கள்.

		ரூ.	அ.	பை.
1.	வால்மீகி ராமாயணப் பாட்டும், ஞான ராமாயணக் கப்பலும்	0	5	0
2.	குசலவ வாக்கியம்	0	5	0
3.	அனந்தங்காடு	0	3	0
4.	ஸ்ரீ பார்வதி அம்மன் சோபனம்	0	5	0
5.	வேதாந்தப்பாட்டுகளும் தினஸரி ஸ்தோத்திரங்களும்	0	4	6
6.	ஜீவநாடகம் முதலிய சில அத்வைதப் பாட்டுகளும் பஞ்சீகரண மகா வாக்கியமும்	0	4	6
7.	பஞ்சீகரண கட்டம்	0	0	6
8.	சாவித்திரி பாடம்	0	2	0
9.	ஸ்ரீ லலிதாம்பாள் சோபனமும் தேவிபாடமும்	0	5	0
10.	ஐந்து கும்மிகள் ...	0	3	0
11.	குறவஞ்சி (தர்மாம்பாள் குறம், வேதாந்தக் குறம், அகண்டவெளிக்குறம்)	0	3	0
12.	ஸ்ரீ மகா பாரத வாக்கியம் விராட, உத்தியோக பர்வங்கள்	0	10	0
13.	ஸ்ரீ பகவத்கீதை, நாகரத்திலும் கிரந்தத்திலும் மூலமும், தமிழில் பதவுரை தாத்பரிய சங்கிரகத்துடனும், எழுதப்பட்டது	2	4	0
14.	கலைக்ஞானி தாயுமானர் - மூன்று பாடல்களின் விரிவுரை	0	8	0

கிடைக்குமிடங்கள் :—

R. S. S. அம்மாள்,

No. 33, Edward Elliot Road,
Mylapore, MADRAS.

R. S. சுப்பிரமணிய வாத்தியார் & Sons.

Book-sellers & Publishers, கல்பாதி, பாலக்காடு.

பி. டி. பாணி அண்டு கோ,

1/15, வெங்கடாசலம் செட்டி தெரு, திருவல்லிக்கேணி.